# அரசு ஊழியர்

**மாத இதழ்**


**2022 மே**

**மலர்:43** **இதழ்:05**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

**அச்சிட்டு வெளியிடுபவர்:**
**மு.அன்பரசு**

**ஆசிரியர்:**
**ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு,**
**மு.பாஸ்கரன்,**
**தெ.வாசுகி,**
**இரா. மங்களபாண்டியன்,**
**கோ.பழனியம்மாள்,**
**சி.பரமேஸ்வரி,**
**சா.டானியல் ஜெயசிங்,**
**சா.கோதண்டபாணி,**
**அ.குபேரன்**

**வரைகலை:**
**கார்ட்டூன்வாசி**

**இதழ் வடிவமைப்பு:**
**ஆர்.காளத்தி** *9677003178*

**இதழ் ஒருங்கிணைப்பு:**
**ஜிஜி**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை-600002

*ஆண்டுச் சந்தா : ரூ.100*
*தனி இதழ் : ரூ.10*


# உள்ளே...


1. **மே தின சூளுரை**
   *தலைவர் மடல் ........................ 4*
2. **அமைப்புதின உறுதிமொழி**
   *பொதுச் செயலாளர்*
   *மேசையிலிருந்து..........................7*
3. **அகில இந்திய மாநாட்டில் தலைவர் அறிமுக உரை** ............................15
4. **வங்கிகள் இணைப்பும் - வரப்போகும் பாதிப்புகளும்** ............................ 18
5. **நையாண்டி உரையாடல்**................ 20
6. **கோரிக்கைகள் தினம்**
   *கட்டுரை.................................. 22*
7. **டீ செலவு மிச்சம்**
   *சிறுகதை .................................. 27*
8. **பெருந்திரள் முறையீடு** ................. 29
9. **கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்**........ 32

தலைவர் மடல்

# தோற்காத போராட்டங்களை நெஞ்சில் ஏந்தட்டும் மே தின சூளுரைகள்!



உழைப்பாள மக்கள் பெற்றிருக்கக் கூடிய ஒவ்வொரு உரிமைகளும் இரத்தம் சிந்தி, உயிர் ஈந்து பெற்ற உரிமைகளாகும். இன்று நாம் விடுமுறையுடன் கொண்டாடும் மே தினம், எட்டுமணி நேர வேலை உரிமைக்காக ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் அடால்ப் பிட்சர், மைக்கேல் ஸ்வாப், ஜார்ஜ் ஏங்கல், சாமுவேல் பீல்டன் ஆகிய தொழிலாளிகள் 1886ஆம் ஆண்டு மே ஒன்றாம் தேதி அமெரிக்கா ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி நடத்திய வேலை நிறுத்தத்திற்காக தண்டிக்கப்பட்டு உயிர்த்தியாகம் செய்து பெற்றுத் தந்த உரிமைகளை நினைவுகூறும் தினமாகும்.

1800 களின் பிற்பகுதிகளில் அமெரிக்கா ஆஸ்திரேலியா நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைநேரம் 15 முதல் 18 மணிநேரமாக இருந்தது. இதை 8 மணி நேரமாக குறைக்க தொழிலாளர்கள் உரிமைக்குரல் எழுப்பினர். ஆனால் பெரும்போரட்டதிற்குப் பின் 10 மணி நேர வேலை என சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இந்த வெற்றியுடன் தொழிலாளர்களின் போராட்டம் முடியவில்லை.

1886-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதியன்று சிகாகோ நகரில் தொழிலாளர்கள் 8 மணி நேர வேலையை உத்தரவாதப் படுத்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக கார்மிக் ஹார்வெஸ்டர் என்ற கம்பெனியின் முன்னால் திரண்டிருந்த 500 தொழிலாளர்களிடையில் தோழர் ஆகஸ்டு ஸ்பைஸ் உரையாற்றிக் கொண்டிருந்தார். அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த கூட்டத்தை காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்கினர். இதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார் மேலும் பலர் தாக்கப்பட்டனர்.

இந்த அடக்குமுறையை கண்டித்து அன்று இரவு, சிகாகோ நகரின் மையப் பகுதியில் உள்ள ஹே மார்கெட் என்ற இடத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர்கள் ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் ஆகியோர் கலந்து

கொண்டனர். சாமுவேல் பீல்டன் பேசிக்கொண்டிருந்தபோது, ஜான்போன் பீல்டு என்ற அதிகாரியின் தலைமையில், 180-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் கூட்டத்தினரை வளைத்து உடனடியாக கலைந்து போகும்படி உத்தரவிட்டனர்.

சிறிது நேரத்தில் அங்கு கலவரம் வெடித்தது. அப்போது திடீரென்று காவல்துறையினர் மீது ஒரு கையெறி குண்டு வந்து விழுந்தது. அதில் ஒருவர் உயிரிழந்தார். 70-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து காவல்துறையினர் துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கி சுட்டனர். இதில் பல தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த கலவரத்தை காரணம் காட்டி கலவரத்தை தூண்டி விட்டதாக தொழிலாளர்களின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். 1886-ம் ஆண்டு மே 1-ம் தேதி கைது செய்யப் பட்டு ஒரு ஆண்டிற்கு மேலாக நீதிமன்றத்தில் இவர்களின் மீதான குற்றசாட்டின் பேரில் விசாரணை நடந்தது. நீதிமன்ற விசாரணையில் ஆகஸ்ட் ஸ்பைஸோ, “இந்த குற்றச்சாட்டே தனக்கு தற்காப்பு வாதமாக அமைந்து விட்டது” என வாதம் செய்தார். காவலர்கள் மீது தான் குண்டு வீசியதாக அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது இதன்மூலம் பொய் என நிரூபிக்கப்பட்டுவிட்டதாக வாதிட்டார். காவலர்கள் மீது வீசப்பட்ட குண்டு தன்னால் உண்மையில் வீசப்பட்டிருந்தால் அதை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்வதில் தனக்கு எந்தவித தயக்கமும் கிடையாது என்று தைரியத்தோடு உரைத்தார்.

மற்றொரு தோழர் ஆல்பர்ட் பர்ஸன் நீதிமன்றத்தில் வாதாடுகையில், “மரம் கனிகளால் அறியப்படுவதைப் போல் தொழிலாளர்கள், போர்க்குணம் மற்றும் தியாகத்தின் மூலம் தங்களது உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். தங்களுக்கு அளிக்கப்படும் மரணதண்டனை தீப்பொறியாக உலகம் முழுவதும் பரவும்!” என ஆர்ப்பரித்தார். ஆஸ்கர் நீபி என்ற தோழர், கலவரம் விளைவிக்கப்பட்ட இடத்தில் நடந்த கூட்டத்திற்கு தான் தலைமை வகித்தேன் என்ற உண்மையை இந்த நீதிமன்றத்தில் ஒப்புக் கொள்வதாகவும், 8 மணி நேரம் வேலை கேட்டு போராடிய தொழிலாளர்களுக்கு நான் தலைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுவதாகவும் உரைத்தார்.

அடால்ப் பிட்சர் என்ற தோழர் நீதி மன்றத்தில் உள்ள காவலர்களைப் பார்த்து எள்ளி நகையாடி “இவர்களா சட்டத்தின் காவலர்கள்? இவர்கள் திருடர்கள். அடுத்தவர்களின் சொத்தினை அபகரிப்பவர்கள்” என முழக்கமிட்டார். தோழர் மைக்கேல் ஸ்வாப் நீதிமன்றத்தில் “தங்களுடைய நோக்கம் கலகம் விளைவிப்பது அல்ல, சோசலிசத்தை அடைவதே!” என்று பிரகடனப்படுத்தினார். தோழர் ஜார்ஜ் ஏங்கல், ``தொழிலாளர்களின் தேவை, வேலை, ரொட்டி, அமைதி இவை மூன்றுதான். இது கூட இவர்களுக்கு இன்று உத்தரவாதப்படுத்தப்படவில்லை`` என்று முழக்க மிட்டார்.

தோழர் சாமுவேல் பீல்டன் நீதிமன்றத்தில் உரையாற்றுகையில், நாங்கள் சோசலிசத்தைப் பேசினால் சிலர் பயப்படுகிறார்கள் நாங்கள் பிறரின் சொத்துக்களை சோசலிசத்தின் பெயரில் அபகரித்து விடுவோம் என நினைக்கிறார்கள். ஆனால் சோசலிசத்தின் நோக்கம் அது அல்ல. யார் ஒருவர் இன்னொருவருடைய சொத்துக்களை திட்டமிட்டு பறிக்கிறார்களோ அதை தடுத்து நிறுத்தக்கூடிய அமைப்பை உருவாக்குவதுதான் சோசலிசம்`` என விளக்கினார்.

சுரண்டப்படும் தொழிலாளர்களை திரட்டி, சோசலிச உணர்வுகளை ஊட்டி

முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராக கிளர்ந்தெழச் செய்வதை ஒடுக்கவே, காவல்காரர்களே குண்டு வீசி சதி செய்து, தங்கள் மீது குற்றம் சுமத்தி மரண தண்டனை வழங்க திட்டமிட்டுள்ளார்கள் என்று தெரிந்திருந்தும், மே தின தியாகிகள் சிறிதும் அஞ்சவில்லை.

நீதிமன்றத்தில் வாதாடுவதன் மூலம் தாங்கள் தண்டனையிலிருந்து தப்பமுடியும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்தக் கொலைக் களத்தையும் பிரச்சார மேடையாக பயன்படுத்தி முதலாளித்துவத்தின் முகமூடியை கிழித்தெறிந்து, சோசலிசத்தின் மேன்மையை தூக்கிப் பிடித்து, நீதிமன்றத்தில் அவர்கள் ஆற்றிய உரையும், ஆதிக்க சக்திகளின் திணறலையும், வரலாற்று ஆவணமாக மாற்றியுள்ளது இந்த மே தினம். 1886-ம் ஆண்டு மே 1-ம் தேதி கைது செய்யப் பட்டு ஒரு ஆண்டிற்கு மேலாக நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, 1887-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி அவர்கள் தூக்கிலிடப்பட்டதற்கு உலகம் முழுவதிலும் இருந்து கண்டனம் எழுந்தது. அதையொட்டி நடந்த தொடர் போராட்டங்களின் விளைவாக 1890ஆம் ஆண்டு தொழிலாளர்களின் கோரிக்கைகளை அமெரிக்க அரசு ஏற்று 8 மணிநேர வேலை உரிமையை அங்கீகரித்தது. இரத்தம் சிந்தி உயிர் ஈந்து போராடிப் பெற்ற இந்த எட்டு மணி நேர வேலை உரிமையை இன்றைய ஒன்றிய அரசு புதிய தொழிலாளர் சட்டங்கள் என்ற பெயரில் 12 மணி நேரமாக மாற்றி அமைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு உழைக்கும் வர்க்கத்தை மீண்டும் கொத்தடிமைகளாக மாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளது. புதிய தொழிலாளர் சட்டங்களின்படி, நிறுவனங்கள் ஊழியர்களின் பணி நேரத்தை 12 மணி நேரமாக அதிகரித்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதுவரை 23 மாநிலங்கள் புதிய தொழிலாளர் சட்டங்களை வகுத்துள்ளன. இந்த சட்டத்தை உழைக்கும் வர்க்கம் அனைவரும் இப்போதிலிருந்தே எதிர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் அடால்ப் பிட்சர், மைக்கேல் ஸ்வாப், ஜார்ஜ் ஏங்கல், சாமுவேல் பீல்டன் ஆகிய தோழர்கள் மரண தண்டனைக்கும் பயப்படாமல் தொழிலாளர்கள் உரிமைக்காக போராடி தூக்கிலேறி அவர்களின் தோற்காத போராட்டங்களின் மூலம் பெற்றுத் தந்த உரிமைகளை இழக்காமல் காத்திட அவர்களின் உயிர்த் தியாகங்களை மறவாமல் நினைவில் ஏந்துவோம் இந்த மே தின சூளுரையில்! ●

## சூடா ஒரு கோப்பை சூப்

**ஓர் அரசு ஊழியரின் புலம்பல்!**

ஊதியப் பணத்தை
ஒருதடையும் சொல்லாமல்
உயர்த்தி அளித்தது அந்தக் காலம்!

ஊதிய பலூனில்
ஊசியால் குத்தி – அதனை
ஒழித்து கட்டியது இந்தக் காலம்!

போதிய சம்பளம், போனசும்
கொடுத்தது அந்தக்காலம்.
பாதியைக்கூட தரமறுக்கும்
பாவிகள் ஆள்வது இந்தக் காலம்!

கோரிக்கை என்றால்
குறையோ நிறையோ
குந்தவைத்து
பேசிமுடிப்பது அந்தக் காலம்!

தாளிக்கும் கடுகாய்
சீறி வெடித்து தடியடி வரையில்
நடத்தி முடிப்பது இந்தக் காலம்!

**- கலைஞர் மு. கருணாநிதி**
*(எதிர்க்கட்சியாய் இருந்த போது எழுதிய கவிதை)*




**39ஆம் அமைப்பு தினம்**

# பெற்ற உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் கட்டிக்காக்க அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம்!

1984வரை தமிழகத்தில் இருந்த சங்கத் தலைமைகள் ஆளும் அரசுடன் சமரச போக்கையே கடை பிடித்து வந்தன. இதனால் ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை. அரசு ஊழியர்களிடம் ஒற்றுமை ஏற்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் உரிமைக்காக போராடவும், கோரிக்கைகளை வென்றெடுக்கவும் புதிய அமைப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. 1984 மே 6ம் தேதி மதுரையில் தமிழக முழுவதும் இருந்து பெரும் வாரியான ஊழியர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவக்கப்பட்டது.

அபொழுது அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கைகளான

1) மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம்

2) போனஸ்

இவைகளை பெற அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை ஒன்றுபடுத்தி இயக்கம் நடத்த வேண்டும். அரசாங்கத்தின் தாக்குதலில் இருந்து அரசு ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் இவைகளை முன்னிறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் செயல்படும் என அறிவிக்கப்பட்டது.

அரசு ஊழியர் சங்கத்திற்கு தோழர் எம்.ஆர். அப்பன் அமைப்பாளராகவும், தோழர் என்.எல். சீதரன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். முதல் மாநில மாநாட்டை 1984 ஜூலை 14,15ல் சென்னையில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

**முதல் மாநில மாநாடு**

இரண்டே மாத இடைவெளியில் 70 ஆயிரம் உறுப்பினர்களை சேர்த்து நடைபெற்ற மாநாடாக நிகழ்ந்தது. பொதுச் செயலாளராக தோழர் எம்.ஆர். அப்பன், மாநிலப் பொருளாளராக தோழர் என்.எல். ஸ்ரீதரன், மாநில துணைத்தலைவர்களாக தோழர்கள் எப்.எம். குத்புதீன், கே.ஆர். சங்கரன், இரா.ஜோதி, வி. வேலாயுதம்நாயர் ஆகியோரும், மாநிலச் செயலாளர்களாக தோழர்கள் இரா. முத்துசுந்தரம், எஸ். சுந்தரேசன், அ. இராமசாமி, கே. இராமசாமி ஆகியோர் ஒருமனதாக தேர்தெடுக்கப்பட்டனர்.

முதல், 2வது, 3வது ஊதியக்குழுக்கள் தன்னிச்சையாக முடிவுகளை அரசு அறிவித்தன. 4வது ஊதியக்குழு அரசு ஊழியர் அமைப்புகளோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென அரசு ஊழியர் சங்கம் பிரச்சாரம் செய்தது. இயக்கங்கள் நடத்தியது.

தமிழக அரசு இடைக்கால நிவாரணமாக ரூ.200, ரூ.300 என அறிவித்தது. 2 வது தவணை அகவிலைப்படியை 4 மாதம் காலதாமதமாக அறிவித்தது.

24.5.1985ல் 4வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை வெளியிடுவது, இ.நி.உ. ஊதியம் ரூ610-20-7300-25 955-30-1075 என அறிவித்தது. அந்த காலகட்டத்தில் மத்திய

அரசின் இளநிலை உதவியாளர் ஊதியம் ரூ.950-20-1150-25-1400 என இருந்தது. (1947ல் ரூ.45-3-60-2-90 ஆக இருந்தது) எனவே மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 4வது ஊதியக்குழுவில் வழங்கப்படவில்லை.

இதற்கிடையில் 1984 நவம்பர் 24,25ல் பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன செயற்குழு, தமிழ்நாட்டில் புதியதாக துவங்கிய அரசு ஊழியர் சங்கத்தை தன்னுடன் இணைத்துக்கொண்டது. தமிழகத்தில் ஊழியர்கள் பல அமைப்புகளில் சிதறி கிடக்கிறார்கள். அவர்களை ஒன்றுபடுத்துவதன் மூலமே கோரிக்கைகள் வென்றெடுக்க முடியும் என வழி காட்டியது.

**துறைவாரி சங்கங்கள்**

தமிழகத்தில் பொது சங்கங்கள் தவிர நூற்றுக்கணக்கான துறைவாரி சங்கங்கள் இயங்கி வந்தன. அவற்றில் வருவாய்துறை அலுவலர் சங்கம், வணிகவரிப்பணியாளர் சங்கம், தொழிலாளர் நலத்துறை அலுவலர் சங்கம், தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம் ஆகியவை தனித்தன்மையுடன் செயல்பட்டு வந்தன. பல துறைவாரி சங்கங்கள் அரசு அலுவலர் ஒன்றியத்துடன் இணைப்பு சங்கமாக செயல்பட்டு வந்தன. இவைகள் சுயமாக இயங்குவதினால் இவற்றை சுயமாக இயங்க வைப்பதன் மூலமாக வலுவான இயக்கம் கட்டப்பட வாய்ப்பு ஏற்படும் என அரசு ஊழியர் சங்கம் முடிவு செய்தது. கருவூலகணக்கு அலுவலர் சங்கம், ஊரகவளர்ச்சித்துறை அலுவலர் சங்கம், மருத்துவத்துறை ஊழியர் சங்கம், கிராம சுகாதார செவிலியர் சங்கம் போன்ற வல்வேறு சங்கங்கள் சுயமாக செயல்பட அரசு ஊழியர் சங்கம் உதவியது. அவர்களுடைய போராட்டங்களை முன்னின்று வழிகாட்டியது.

வருவாய் கிராம உதவியாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தனர். செருப்பு அணிந்து அலுவலகத்திற்கு செல்ல முடியாது. வழங்கால ஊழியர்கள் துண்டு தோளில் போட முடியாது. இடுப்பில்தான் கட்ட வேண்டும். புதிய தலைமுறை ஊழியர்கள் பேண்ட் அணிய முடியாது. அதிகாரிகளின் வீட்டில் வேலைக்காரனாக செயல்பட வேண்டும் என்ற கொடுமைகளை அனுபவித்து வந்தனர். அவர்களிடம் அரசு ஊழியர் சங்கம் கடைபிடித்த இடைவிடாத அணுகுமுறை மற்றும் போராட்டத்தால் இன்று கொத்தடிமையில் இருந்து விடுபட்டு மற்ற ஊழியர்கள் போல மதிக்கப்படுகின்றனர்.

**தொகுப்பூதிய ஊழியர்கள்**

தமிழக அரசு குறைந்த ஊதியத்தில் லட்சக்கணக்கான ஊழியர்களை சத்துணவுத் திட்டத்திலும், ஊட்டச்சத்து திட்டத்திலும் பணி அமர்த்தியது. அரசு ஊழியர்களை போல அவர்களுக்கும் எவ்வித சலுகைகளும்ம் கிடையாது. நெல்லிக்கனி போல் சிதறி கிடந்த ஊழியர்களை ஒன்று திரட்டி சத்துணவு ஊழியர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்த அரசு ஊழியர் சங்கம் உதவியது. இன்று ஆலமரம்போல் வளர்ந்து அவர்களால் பல கட்ட போராட்டங்கள் மூலம் கோரிக்கைகளை வென்றெடுக்க முடிந்துள்ளது.

இவ்வாறாக சிதறி கிடந்த ஊழியர்களை ஒன்று திரட்டி வலுவான அமைப்புகள் மூலம் போரட தயார் நிலைக்கு கொண்டு வர அரசு ஊழியர் சங்கத்தால் முடிந்தது.

4வது ஊதியக்குழு மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை பரிசீலிக்கவில்லை. இதனை கண்டித்து அரசு ஊழியர் சங்கம் துறைவாரி சங்கங்களுடன் இணைந்து 15.10.85 முதுல் 17.10.85 முடிய 3 தினங்கள் 24 மணி நேர தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தது. இந்த இயக்கம் ஊழியர்களுக்கு புதியது. அரசும் எதிர்பாக்கவில்லை. கலந்து கொள்ளக்கூடாது என சுற்றறிக்கை அனுப்பியது. இருப்பினும் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றிகரமாக அமைந்தது.

எம்.ஜி.ஆர். அரசு கலந்து கொண்டவர்களுக்கு சம்பளப்பிடித்தம் செய்தது.

29.10.85 மாவட்ட தலைநகரில் பேரணி நடைபெற்றது. எப்போதும் இல்லாத அளவில் ஊழியர்கள் கலந்து கொண்டனர். அரசு ஊழியர் சங்கம் துவங்கிய ஒரு வருட காலத்தில் அமைப்புகளை பலப்படுத்தி ஊழியர்களை போராட்டக்களத்தில் நிற்க வைத்த வேலைகளை அரசு ஊழியர் சங்கத்தால் செய்ய முடிந்தது.

**ஜேக்டீ போராட்டம்**

ஆசிரியர்கள் அமைப்புகள் ஒன்று சேர்ந்த ஜேக்டீ அமைப்பை, உருவாக்கினார்கள். ஊதிய உயர்வு போன்ற போராட முடிவு எடுத்தனர் ஆசிரியர் தினத்தை துக்க தினமாக கொண்டாடினர். 4வது ஊதியக்குழு அரசு ஆணைகளை எரித்தனர். இதனால் தலைவர்களும், ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டனர். இதனை கண்டித்து 15.11.84 முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். ஆசிரியர்கள் கிராமம் முதல் நகரம் வரை பரவி இருந்தாலும் ஏதாவது ஒரு அமைப்பில் உறுப்பினராக இருந்தனர். ஆரம்ப பள்ளி, இடைநிலை, மேல்நிலை, கல்லூர் என அனைவரும் போராட்டகளத்தில் இருந்தனர். அரசு செவிசாய்க்காததால் மறியலில் ஈடுபட்டனர்.

ஆளும் எம்.ஜி.ஆர். அரசு ஆசிரியர்கள் மீது அடக்குமுறைகளை ஏவியது. 60ஆயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் 12 ஆயிரம் பேர் பெண்கள். போராட்டக்களத்தில் 34 ஆசிரியர்கள் மரணமடைந்தனர். சிறையில் தீபாவளியை துக்க தினமாக கொண்டாடினர்.

அரசு ஆசிரியர்களின் உறுதியான நிலை கண்டு பேச்சுவார்த்தை நடத்தியது. முதல்வர் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார். போராட்டம் வாபஸ் பெற்றப்பட்டது. பழிவாங்கல் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது. கார்த்திகேயன் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு ஒரு ஊதிய உயர்வு மட்டும் வழங்கியது.

**ஆதரவு இயக்கம்.**

ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக அரசு ஊழியர் சங்கம் ஒன்றிணைந்து பேரமைப்பு ஏற்படுத்தி போராட்டம் நடத்தியது. எம்.ஜி.ஆர். நான் இருக்கும் கட்டிடத்தில் உள்ள தலைமைச் செயலக ஊழியர்கள் போராடுவதா எனக் கூறி 33 ஊழியர்களை சஸ்பெண்ட் செய்யப்பட்டது. சங்க அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. சங்க அலுவலகம் பூட்டு போடப்பட்டது.

போராட்ட காலத்தில் ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணியும், மூட்டாவும் அரசு ஊழியர்களையும் இணைத்துக்கொண்டு போராட வேண்டும் என ஜேக்டீக்கு கோரிக்கை வைத்தனர். ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை.

முரட்டுத்தனமான அரசை எதிர்க்க ஆசிரியர்கள் மட்டும் போராடினால் போதாது என ஊழியர்களையும் இணைத்து போராட வேண்டும் என்ற படிப்பினையை ஜேக்டீ போராட்டம் எடுத்துக் காட்டியது. அரசு ஊழியர் சங்கம் ஆரம்பம் முதலே இதைத்தான் கூறி வந்தது.

**2வது மாநில மாநாடு**

வேலூரில் 2வது மாநில மாநாடு 1986 செப்டம்பர் 12, 13ல் நடைபெற்றது. மத்திய அரசுக்க இணையான ஊதியம் என்று கோரிக்கைக்காக அனைத்துப் பகுதி ஊழியர்களையும் திரட்டி

போராடுவது என முடிவு செய்யப்பட்டது. இளநிலை உதவியாளர் ஊதியம் மத்தியில் ரூ.950ம் மாநிலத்தில் ரூ.610ம் என இருந்தத. மாதம் ரூ.340 இழந்து வருகிறோம். (1986 வருட மதிப்பு) என்று கோஷத்தை துண்டு பிரசுரம் மூலம் அலுவலகம், அலுவலகமாக ஒவ்வொரு உறுப்பினர்களிடம் நேரிடையாக சென்று பிரச்சாரம் செய்யப்பட்டது. மாற்று

சங்கத்தினர் நோட்டீஸ் பெற மறுத்தனர். அலுவலகத்திற்குமுன் பிரச்சாரம் செய்யக்கூடாது என்றனர். இவ்வளவு தொகை வித்தியாசத்தை அரசு எப்படி தரும் என்றனர்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்துடன் இணைந்து செயல்பட்டதால் மற்ற மாநில அரசு ஊழியர்கள் எவ்வளவு ஊதியம் வாங்குகின்றனர். நாம் எவ்வளவு பின் தங்கி இருக்கிறோம் என ஆதாரத்துடன் அரசு ஊழியர் சங்கம் பிரச்சாரம் செய்தோம்.

அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்று பழமொழி உண்டு உணர்வு மட்டம் வளர வளர குணமாற்றத்திற்கு இட்டுச்செல்லும் என்று தத்துவத்திற்கு ஏற்ப 1986 முதல் 1988வரை) இரண்டு வருட கால பிரச்சார இயக்கம் ஊழியர்கள் மத்தியில் கோரிக்கையின் நியாயத்தை உணர வைக்க முடிந்தது.

முத்தாய்ப்பாக 1987 ஜுன் 21 முதல் 14 முடிய நான்கு நாட்கள் தொடர் உண்ணாவிரதமும், 1987 நவம்பரில் 15 நாட்கள் குமரி மற்றும் நீலகிரி இரண்டு முனைகளிலிருந்து தலைவர்களின் தொடர் பிரச்சார இயக்கம் அனைத்து பகுதி ஊழியர்களையும் சிந்திக்க வைத்தது.

**10.02.88 ஒரு நாள் வேலை நிறுத்தம்**

14.11.86 முதல் பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கூட்டத்தில் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெற 10.2.88ல் அகில இந்திய அளவில் 80 லட்சம் ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் வேலை நிறுத்தம் செய்ய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துறைவாரி சங்கக் கூட்டத்தினை நடத்தி வேலை நிறுத்த அவசியத்தை எடுத்துக் கூறியது. துறைவாரி சங்கங்கள் ஒவ்வொன்றாக வேலை நிறுத்தம் செய்வது என முடிவு எடுத்தன.

1988 ஜனவரி 9ல் மாவட்டந்தோறும் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடைபெற்றது. ஜனவரி 23ல் மதுரையில் மாநில வேலை நிறுத்த ஆயத்த மாநாடு மிக எழுச்சியோடு நடைபெற்றது. மாநாட்டில் ஆசிரியர்களின் அமைப்பில் இருந்து ஜேக்டீயின் அமைப்பாளர் மயில்சாமி கலந்து கொண்டு பேசினார்.

வேலை நிறுத்த மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருக்க விடுப்பு மறுப்பு, சம்பள பிடித்தம், ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம் என அரசு மிரட்டியது. அதனையும் மீறி மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது.

1988 ஜனவரி 25ல் தலைமைச் செயலாளரை சந்தித்து 10.2.88ல் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய போவதாக வேலை நிறுத்த நோட்டீஸ் தோழர்கள் எம்.ஆர். அப்பன், என்.எல். ஸ்ரீதரன் ஆகியோர் வழங்கினர். இதுவரை தொழிற்சங்கங்களே வேலை நிறுத்த நோட்டீஸ் அரசுக்கு வழங்கின. ஆனால் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்த நோட்டிஸ் வழங்கியது. தமிழக அரசுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லை என அரசு கூறியது. இதனை தெரிந்தே தான் வேலை நிறுத்தம் செய்ய போகிறோம் என அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் கூறினர். 1947ல் ஜெகதீசன் தலைமையிலான சங்கம் வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கியபின் இப்போதுதான் 1988ல் அரசு ஊழியர் சங்கம் வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கியது.

வேலைக்கு செல்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என அரசும் மாற்று சங்கமும் பிரச்சாரம் செய்தது. அதையும் மீறி ஒரு லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். வேலை நிறுத்தத்தை ஆதரித்து ஆசிரியர்கள் கருப்பு பேட்ஜ் அணியுமாறு ஜேக்டீ அமைப்பு முடிவு செய்தது தமிழக அரசு ஊழியர்களுக்கு ஒரு நாள் சம்பள பிடித்தம் செய்தது (பின்னர் சம்பளத்தை திரும்ப பெற்றோம்)

**போராட்ட படிப்பினை**

நடைபெற்ற ஒரு நாள் வேலை நிறுத்தம் காரணமாக ஊழியர்கள் மத்தியில் கோரிக்கையின் நியாயத்தையும் ஊழியர் ஒற்றுமையையும் ஏற்படுத்தியது. துறைவாரி சங்க ஒற்றுமையானது வேலை நிறுத்தம் போராட்டத்தில் கலந்து கொள்ளாத மாற்று சங்கத்தினர் கூட நியாயமான போராட்டம் என கூற வைத்தது. வேலை நிறுத்தத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்தவர்களை ஊழியர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இணைந்து போராடுவதன் மூலமும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெற முடியும் என்ற எண்ணம் மேலோங்கியது. அடுத்த கட்ட இயக்கத்தில் அரசு ஊழியர் ஆசிரியர்கள் இணைந்து போராடினார்கள். அதற்கு 10.2.88 ஒரு நாள் வேலை நிறுத்தம் உந்து சக்தியாக அமைந்தது என்றால் மிகையாகாது. இன்று அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் அகவிலைப்படி, போனஸ் பெற்று வருகிறோம். ஆனால் இவைகளை பெறுவதற்கு 40 ஆண்டு காலம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட வேண்டியிருந்து, 1947ல் வைத்த கோரிக்கை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவங்கி ஒரு பரந்துபட்ட கட்டமைப்பை ஏற்படுத்தி 1988ல் கோரிக்கை நிறைவேறியது.

இதனைபெற நமது சங்க முன்னோடிகள் எவ்வாறு போராடினார்கள்? என்ன துயரங்களையெல்லாம் அனுபவித்தார்கள்? என்பதை இந்த அமைப்பு தினத்தில் நினைவு கூர்வோம்.

தமிழ்நாட்டில் துறைவாரிச் சங்கங்களை உருவாக்கி அந்த அமைப்புகளை ஜனநாயக பூடரவமாக செயல்படவும், ஊழியர்களின் நலனுக்காக போராட்டத்தை திட்டமிட்டு நடத்திட பக்கபலமாக இருந்த வழி நடத்தியது அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் (உதாரணம்) ஒரு சில துறைவாரிச் சங்க போராட்ட நிகழ்வுகள்

**கிராம சுகாதார செவிலியர் போராட்டம்**

கிராம சுகாதார செவிலியர்களின் கோரிக்கைகளுக்காக பல கட்ட போராட்டங்கள் நடத்தியும் பிரச்சினைகள் தீராததால் 21.9.2015 அன்று சென்னை டி. எம்.எஸ். வளாகத்தில் கால வரையறையற்ற உண்ணாவிரதம் நடைபெற்றது.

பந்தல் போடக் கூடாது, ஒலிபெருக்கி வைக்கக்கூடாது என காவல்துறை நெருக்கடி கொடுத்தும் அதையும் மீறி கிராம சுகாதார செவிலியர்கள் வெள்ளை சீருடையுடன் 500பேர் திரண்டனர். உண்ணாவிரதம் வெற்றிகரமாக துவங்கியது சுகாதார இயக்குநர் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். கோரிக்கைகள் அனைத்தும் அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்டதால் தமிழக அரசுதான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என சங்கம் கூறிவிட்டது. பெண்கள் தானே இரவு ஆனதும் கலைந்து விடுவார்கள் என தமிழக அரசு நினைத்தது. இரவு ஆகஆக உண்ணாவிரதம் போராட்டம் சிறிது அளவுக்கூட குறையவில்லை. வேறு வழியின்றி சுகாதாரத்துறை அரசு செயலாளர் இரவு 8 மணிக்கு சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தைக்கு நடத்தினார். கோரிக்கைகள் சிலவற்றை பறிசீலித்து அரச விரைவில் முடிவை அறிவிக்கம் எனக் கூறியதை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. மகளிரின் உறுதிமிக்க போராட்டம் அரசை அசைய வைத்தது. இவ்வியக்கம் முடியும் வரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் களத்தில் நின்று பாதுகாத்தது.

**சத்துணவு ஊழியர் போராட்டம்**

32 ஆண்டுகளாக கோரிக்கைகள் மீது தமிழக அரசு எந்த முடிவையும் எடுக்காததால் 28.9.15 அன்று தமிழக முதல்வரிடம் முறையீடு செய்ய சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் இருந்து பல்லாயிரக்கணக்கான சத்துணவு ஊழியர்கள் பேரணியாகப் புறப்பட்டனர்.

எழுப்பூர் ரயில் நிலையம் முன்பு காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். தமிழக முதல்வரை சந்திக்காமல் அழைத்து செல்ல மாட்டோம் என ரோட்டில் அமைர்ந்து விட்டார்கள் இரவு ஆகியும் கலைந்து செல்ல மறுத்ததால் அந்த பகுதி தெரு விளக்குகள் எல்லாம் திட்டமிட்டு அனைக்கப்பட்டன.

காவல்துறை வேறு வழியின்றி சங்கத் தலைவர்களை தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சென்றனர். முதல்வரோ, இலாகா அமைச்சரோ அங்கு இல்லை. மாறாக துறை அரசுச் செயலாளர் மட்டுமே அங்கு காத்திருந்தார். முதல்வரிடமோ, துறை அமைச்சரிடமோ தான் பேசுவோம் என சங்க நிர்வாகிகள் பிடிவாதமாக இருந்திருந்தால் சங்க நிர்வாகிகளை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

போராட்டம் தீவிரமடைந்தாலும் சத்துணவு ஊழியர்கள் கோபமாக இருப்பதாலும் காவல்துறை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை இரவோடு இரவாக சந்தித்து அரசு பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் நிங்கள் வந்த பேசுங்கள் என கூறியது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சத்துணவு ஊழியர்கள் பிரச்சினையை அந்த நிர்வாகிகள் ட்டுமேன பேசுமுடியும் கைது செய்யப்பட்ட சங்க நிர்வாகிகளை அழைத்து வாருங்கள் பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைக்கிறோம் என அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் காவல்துறையினரிடம் கூறிவிட்டனர்.காவல்துறை உடனடியாக சத்துணவு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்து வந்து அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளிடம் ஒப்படைத்தது அதன்பின் இரவு ஒரு மணிக்கு சமூக நலத்துறை அமைச்சரின் இல்லத்திற்கு காவல்துறையினர் அங்கு காத்திருந்த அமைச்சரிடம் சங்க நிர்வாகிகள் பேசினார்கள். நாளை காலை தலைமை செயலகத்தில் விரிவாக பேசுவோம் எனவும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அமைச்சர் கூறினார். இரவு 3 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

மறுநாள் சமூக நலத்துறை அமைச்சர் தலைமைச் செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர். சில கோரிக்கைகள் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஊழியர்களின் உருக்கு போன்ற ஒற்றுமையின் வெளிப்பாடுதான் தமிழக அரசின் நள்ளிரவு பேச்சுவார்த்தையாகவும் இந்த உருக்கு போன்ற போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான். சங்கம் பலமாக இருந்து இன்றும் சத்துணவு ஊழியர் சங்கம் ஊழியர்கள் நலனுக்காக சமரசமற்ற போராட்டத்தை கொண்டுதான் இருக்கிறது.

மேற்கண்ட துறை சங்கம் மட்டுமல்ல. தமிழகத்தில் துறைச் சங்கங்களை போராட்டம் நடைபெறும் காலத்தில் அவர்களுக்காக களத்தில் நிற்பது மட்டுமல்ல, அரசையும் பேச வைக்கும் முயற்சிகளில் அவர்களின் கோரிக்கைகள் அரசிடமிருந்து போராடி பெற்று தருவதில் இன்றும் முன்னணியாக இருக்கும் அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

**முதன்மையான போராட்டங்கள்**

அரசு ஊழியர் சங்கம் 1984ல் துவங்கப்பட்டது. அது தனது சங்க பயணத்தில் வரலாற்று சிறப்பு மிக்க போராட்டங்களை நடத்திய ஒரு சில இயக்கம்.

1. 1988 போராட்டம் வேலை நிறுத்தம் முற்றுகை போராட்டம் அரச ஊழியர் ஆசிரியர்களை இணைத்துக்கொண்டு 40 ஆண்டுகளாக அரசு ஊழியர்களின் கனவான மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெற முடிந்தது.

2. 2003 போராட்டம் வேலை நிறுத்தம் அரசு ஊழியர் ஆசிரியர்களை இணைத்துக்கொண்டு நடத்தப்பட்டது. வரலாறு காணாத அடக்குமுறை சந்தித்த 1.76 லட்சம் டிஸ்மிஸ் செய்யப்பட்டபோதும் அத்தனை ஊழியர்களையும் எந்த பாதிப்பு இல்லாமல் மீண்டும் அதே இடத்தில் பணி அமர்த்தியது சிறையில் இருந்த காலங்களுக்கும் பணிக்காலமாக பெற்று தந்து ஊழியர்களிடமிருந்து பறிக்கப்பட்ட 14 வகையான சலுகைகளை திரும்ப பெற முடிந்தது.

2016 போராட்டம் வேலை நிறுத்தம், காத்திருப்பு போராட்டம் புதிய கோரிக்கைகளை பெற இருக்கும் சலுகைகளை மேம்படுத்த குறிப்பாக புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திட ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணியை இணைத்துக்கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மட்டும் தன்னந்தனியாக நடத்திய போராட்டம். இப்போராட்டம்தான் இரும்பு மனிஷி இவரிடம் கோரிக்கைள் பெற முடியாது என்று திமுக வட அறிக்கைவிட்டது. கல்லில் நார் உரிக்க முடியுமா? தமிழக அரசு உங்களை பழிவாங்கிவிடும். பணிக்குச் செல்லுங்கள் என்றார் முன்னாள் முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள். ஆனாலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எதற்கும் அஞ்சாமல் காத்திருப்பு போராட்டம் என்பது அரசு ஊழியர் சங்க வரலாற்றிலேயே புதுமையான போராட்டம். இதுவரை இந்த போராட்டம் நடத்தப்படவில்லை.

இப்போராட்டம் அரசாங்கத்தை அசைய வைத்தது. 19.2.2016 சட்டமன்ற 110 விதியின் கீழ் 2 அறிவிப்புகள். அதில் குறிப்பாக பழைய ஒய்வூதிய திட்டத்தை அமலாக்க குழு அமைக்கப்பட்டது. சத்துணவு ஊழியர் ஒய்வூதியம் ரூ.1000/- லிருந்து 1500, ஊய்வுகால பலன்கள் 50 ஆயிரத்திலிருந்து 60ஆயிரம், கிராம சுகாதார செவிலியர்களுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் அறிவித்தார்.

**2017 ஜாக்டோ -ஜியோ**

வரலாற்று சிறப்புமிக்க போராட்டம் 7 லட்சம் பேர் பங்கு, உயர்நீதிமன்ற தடை என்று சொன்னபோதிலும் போராட்டம் தீவிரமடைந்தது. அந்த போராட்டம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தலைமைச் செயலாளரை உயர்நீதி மன்றத்தில் நிறுத்தி அரசு ஊழியர் ஆசிரியர் ஊதிய உயர்வு 13.10.2027 பெற்றோம். அதேபோல் 2019,2020 போராட்டம் வலுவாக நடத்தினோம்.

**பிப்ரவரி 2021 2ம் தேதி தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம்**

இதுவரை நமது சங்க வரலாற்றில் இப்படிப்பட்ட போராட்டத்தை நடத்தியல்லாமல் பல்வேறு அரசின் அடக்குமுறைகளை சந்தித்து தன்னந்தனியாக மிக எழுச்சிமிக்க போராட்டம் நடத்தினோம். தமிழக அரசும் அரசு ஊழியர்கள் இப்படியும் போராட்டம் நடத்த முடியுமா? என்று அச்ச உணர்வுடன் இருந்த இந்த போராட்டம் அரசு ஊழியர்களின் மத்தியில் நினைவில் நிற்கின்ற போராட்டம்.

**பிப்ரவரி 19, 2021**

கடந்த அதிமுக அரசின் அடக்கு முறைகளை எதிர்த்து இந்தியாவில் சுதந்திரமடைந்து தமிழகத்தில் பிப்ரவரி 19 கோட்டை முற்றுகை போராட்டம் எந்த தொழிற்சங்கமும் செய்ய முடியாத போராட்டம். அதாவது புனித ஜார்ஜ் கோட்டைக்கு சென்று முற்றுகை போராட்டத்தை நடத்தி வலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்பதை அது மட்டுமா? இப்போராட்டத்தின் வெளிப்பாடு 10 ஆண்டுகளாக அரசு ஊழியர் ஆசிரியர், மக்கள் விரோத போக்கை கடைபிடித்த அதிமுகவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தியுள்ளோம். மேற்கண்ட போராட்ட களத்திலும் தலைவர்கள் முன்னணி ஊழியர்கள், மகளிர் கைது

செய்யப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். ஊதிய வெட்டு, பதவி இறக்கம், பணி நீக்கம், இடமாறுதல்கள் என பல வகையில் பழிவாங்கப்பட்டனர். இவைகள் எல்லாம் போராட்ட களத்தில் ஏற்பட்ட வீரத்தழும்புகளாக மாறி இன்றும் நினைவில் நிற்கின்றன. தோழர்களின் உறுதிமிக்க குணம் தியாகங்கள் மூலமாகதான் அரசு ஊழியர்கள் பல சலுகைகளை பெற்று நடுத்தர வர்க்க அமைப்புகளிலேயே உயர்வான நிலையில் இன்று உள்ளனர். இப்போராட்டம் ஊழியர்களின் எழுச்சிமிக்க பங்கேற்பினால் அரசு வேலை நிறுத்த காலங்கள் பணிக்காலமாக வழங்கும் நடவடிக்கைகள், அத்தனையும் ரத்து பணி மாறுதல் ரத்து போன்ற கோரிக்கைகளை விடாப்பிடியான போராட்டத்தினால் பெற்றிருக்கிறோம்.

எனவே தோழர்களே இப்படிப்பட்ட போராட்டங்களுக்குப் பின் உருவான இந்த இயக்கம் தோற்றுவிக்கப்படட நாள் முதல் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி வருகிறது. இந்த அமைப்பு ஸ்தாபிக்க நம் முன்னோடித் தோழர்கள் செய்த பெரும் தியாகங்கள் நினைவு கூர்வது மட்டுமல்ல இந்த அமைப்பு தினத்தின் நோக்கம் அவர்கள் வியர்வை சிந்தி ரத்தம் சிந்தி பெற்று தந்த உரிமைகளை விட்டுவிடாமல் பேணிகாத்து அதை அடுத்த தலைமுறை அரசு ஊழியரிடம் ஒப்படைப்பதும், நம்முடைய தலையாய கடமையாகும். பெற்ற உரிமைகளை பேணி காப்போம். இழந்த உரிமைகளை விரைந்து மீட்போம். இந்த அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம்.

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியுடைமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்வோம்
பொதுவுடமைக் கொள்கைகளை
புவியெங்கும் கொண்டு சேர்ப்போம். ●




**காண்பதெல்லாம் தொழிலாளி படைத்தான். அவன் காணத்தகுந்தது வறுமையாம், பூணத்தகுந்தது பொறுமையாம்! – பேரறிஞர் அண்ணா.**

# உழைப்பினால் ஈட்டப்பட்ட உரிமைகளை உருக்குலைய விடலாமா தோழா? காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை கைகோர்ப்போம் வா! வா!

- ப.விஸ்வநாதன்

*ஏப்ரல்13 – 16, 2022ல் பீகார் மாநிலம் பெகுசராய் நகரில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 17ஆம் தேசிய மாநாட்டில் சம்மேளனத்தின் உதவி பொது செயலாளரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவருமான தோழர் மு.அன்பரசு ஆற்றிய அறிமுக உரை.*

மரியாதைக்குரிய தலைமைக் குழுவே ! அன்பார்ந்த பிரதிநிதிகளே! பார்வையாளர்களே!

ஏப்ரல் 2018ல் அதாவது சென்னையில் நடைபெற்ற தேசிய மாநாட்டிற்கு பின்பு நான்கு ஆண்டுகள் கழித்து நாம் சந்திக்கிறோம். இந்த நாட்டின் சுதந்திர இயக்கத்தில் தன்னலமற்ற பங்கேற்பினை பீகார் மாநிலம் வழங்கியுள்ளது. பீகாரின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் தோன்றிய கிசான் சபா (விவசாயிகள் இயக்கம்) சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான அம்சமாகும். அது 1929ல் சுவாமி சஹஜானந் சரஸ்வதி தலைமையின் கீழ் தொடங்கியது. விவசாயிகளின் குத்தகை உரிமைகள் ஜமீன்தாரி தாக்குதலுக்கு ஆளாகிய நிலையில் அதற்கு எதிராக விவசாயிகளை அணிதிரட்ட அந்த இயக்கம் தொடங்கப்பட்டது. பிறகு அது தீவிரமடைந்து, இந்தியாவின் இதர பகுதிகளுக்கு பீகாரிலிருந்து பரவியது. அந்த இயக்கம் பறந்து விரிந்தது போன்று இந்த மாநாட்டின் விவாதங்களும், தீர்மானங்களும் நாடு முழுவதும் பரவும். குறிப்பாக நமது குறிக்கோள்களில் மகத்தான வெற்றிகளை ஈட்ட அரசு ஊழியர்களிடமும், ஆசிரியர்களிடமும் இந்த விவாதங்கள் தீர்மானங்கள் சென்று சேர வேண்டியது அவசியமாகும். நமது தேசத்தின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளையும், உழைக்கும் வர்க்கத்தின் குறிப்பாக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியமான பிரச்சனைகளையும் இந்த மாநாட்டில் ஆய்வு செய்ய இருக்கிறோம். பணி நிலைமை மற்றும் பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களை பாதுகாப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட்டு உருவாக்குவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

கடந்த மாநாட்டிற்கு பிறகு இந்தியாவில் வலதுசாரி அரசியல் மேலும் வலுவடைந்தது வருவதை காணமுடிகிறது. நமது நாட்டின் மீதும், மக்கள் மீதும் பல்முனை தாக்குதலை பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி அரசு தொடுத்து வருகிறது. பொருளாதார வீழ்ச்சிகள் மூலம் தன்னை உணர்ந்துகொண்ட உலக முதலாளித்துவத்தின் முறைகள் நெருக்கடிகளாக மாறியுள்ளது. அனைத்து முதலாளித்துவ நாடுகளும் பெரும்பான்மை மக்களை பொருளாதாரரீதியாக சுரண்டுவதை மேலும் தீவிரமாக்குவதற்கும், அவர்களது ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதால் தொடுப்பதற்கும் இது வழிகோலியுள்ளது. உலகளாவிய அளவிலும் தனிப்பட்ட நாடுகளிலும் பொருளாதார சமத்துவமின்மையை மேலும் அகலப்படுத்த உலக முதலாளித்து பொருளாதார நெருக்கடி வழி வகுத்துள்ளது.

உலக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யின் வளர்ச்சி தொடர்ந்து இறங்குமுகமாக உள்ளது. கடந்த ஆண்டில் ஆகப்பெரிய செல்வந்தர்கள் 10 பேரின் சொத்துக்கள் 41,300 கோடி டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளது.

கோவிட் தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்யும் மிகப்பெரும் மருந்து நிறுவனங்கள் ஒன்பது புதிய மில்லியனர்களை உருவாக்கியுள்ளன. ஒவ்வொரு நிமிடமும் பசி பட்டினியால் 11 பேர் இறப்பதாக ஆகஸ்பாம் மதிப்பிடுகிறது. உலக மக்கள் தொகையில் பத்து விழுக்காட்டினர் அதாவது 81.1 கோடி மக்கள் சத்துணவு குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் மதிப்பிட்டுள்ளது. 2019ல் 18.7 கோடியாக இருந்த உலகளாவிய வேலையின்மை 2022ல் 20.5 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட, அணிதிரட்டப்பட்ட போராட்டங்கள் வலுப்படுத்தப்படுவதை வலதுசாரி சக்திகள் தடுக்க நினைக்கின்றன.

45 ஆண்டுகளுக்குப் பிறகு பெருந்திரள் வறுமை நிலவும் நாடு என்று அழைக்கப்படும் நிலைமைக்கு இந்தியா ஆகியுள்ளது. மக்கள் மீது தொடர்ந்து சுமையேற்றி வரும் மத்தியில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. அரசாங்கம் மற்றொரு தாங்க முடியாத சுமையாக மற்றொரு உயர்வை தொடங்கியுள்ளது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் கடும் விலையேற்றம் நடப்பு காலகட்டத்தில் சாதாரணமாக மக்களின் வாழ்வை மேலும் மோசமாக்கியுள்ளது.

தேவையான ஆலோசனை, விவாதம், அரசமைப்பு சட்டம் கட்டாயமாக்கியுள்ள மாநில அரசுகளுடனான விவாதம் ஆகிய செயல்முறைகள் எதுவுமின்றி தேசிய கல்விக் கொள்கை 2020, அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. லாப அதிகமாக்கல் நோக்கத்தில் பெருநிறுவன கட்டுப்பாட்டை எய்துவதற்காக ஆளும் வர்க்கங்களால் உருவாக்கப்பட்ட மூன்று பிற்போக்கு விவசாய சட்டங்களுக்கு எதிராக சம்யுக்த கிசான் மோர்ச்சா தலைமையில் நடைபெற்ற ஓராண்டு கால விவசாயிகளின் போராட்டம் மோடி அரசாங்கத்தை நிர்பந்தித்து அந்த சட்டங்களை கைவிட வழி வகுத்தது.

மேற்கண்ட அரசியல் நிலைமைகள் காரணமாக மாநில அரசு ஊழியர்களின் போராட்டங்கள் தினம்தினம் விரிவாகி வருகின்றன. ஏதோ ஒரு விதத்தில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தங்களது போராட்டங்களை நடத்திட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. தற்போது மாநில அரசு ஊழியர்கள் நடத்திவரும் போராட்டங்களில் பொதுமக்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்று வருகின்றனர். அது நல்ல விளைவுகளுக்கான அறிகுறி. நமது போராட்டங்களின் வெற்றி என்பது நமது உரிமைகளை வென்றெடுப்பது மட்டுமன்றி, நமது அமைப்பையும் அது வலுப்படுத்தும்.

தங்களது சொந்த நலன்களுக்காக சங்கம் இல்லை என்றும், ஊழியர்களின் முன்னேற்றத்திறகாக உள்ளன என்றும் நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். அரசு நிர்வாகம், தொழில், வர்த்தகம் மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் தொழிலாளிகள் அல்லது அவர்களது பிரதிநிதிகளால் மேலாண்மை செய்யப்படும் முதலாளித்துவ சமூகத்தில், இந்த அமைப்பு முறை, ஒடுக்குமுறையாலும், சுரண்டலாலும் நிரம்பியிருக்கும் இந்தியாவிலும் இதுவே உண்மை. நிர்வாகம், காவல்துறை, இராணுவம் மற்றும் நிதி அமைப்புகள் ஆகியவை நடுநிலைமை பராமரிப்பதில்லை. மாறாக அவை அதிகார மையங்களையும், அதிகார வர்க்கங்களையும் ஆதரிக்கின்றன. செய்தி இதழ்களோ, தொலைகாட்சிகளோ எதுவாயிருந்தாலும் ஊடகங்கள் அதிகார மைய மனிதர்களாலோ அவர்களது பிரதிநிதிகளாலோ நடத்தப்படுகின்றன. அவை எப்போதும் உழைக்கும் மக்களுக்கு எதிரான நிலையையே எடுக்கின்றன. இந்த சூழ்நிலைகளில், சிறப்பு இயல்பு கொண்ட அமைப்புகள் சாதி, நிறம், மதம் எதுவுமின்றி கட்டமைக்கப்படுவது அவசியமாகும். எனவே தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தற்காலிக நிவாரணங்கள் சிலவற்றை பெற்றுத் தரும் அமைப்பாக தொழிற்சங்களை எவரும் எண்ண முடியாது. மாறாக, தொழிலாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களை பாதுகாப்பது மட்டுமின்றி, பொது மக்களின் நலன்களையும் பாதுகாப்பதும் தொழிற்சங்கங்களின் நோக்கமாகும். இந்த நடவடிக்கை மூலம் மற்ற முறையில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை நாம் விடுவிக்கிறோம்.

சங்கங்களின் சிறப்பு பங்கேற்பின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருக்கிறோமோ என்பதே நமது கேள்வி. அந்த இலக்குகளை அடைய எந்த நடவடிக்கையாவது எடுத்திருக்கிறோமா? நடப்பு தொழிற்சங்கத்தை நடத்துவதற்கு நடைமுறையில், பல தடைகளை நாம் எதிர்கொள்கிறோம். முக்கியமாக, தொழிற்சங்கத்திற்கு நமது உண்மையான பங்களிப்பு தொடர்பாகவும், இலக்கை எய்துவது தொடர்பாகவும், சாதாரண உறுப்பினர்களிடம் மட்டுமின்றி தொழிற்சங்க நிர்வாகிகளிடமும் பங்களிப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த வகையான புரிதல் இல்லாமை சில தவறுகளையும், இழப்புகளையும் உண்டாக்குகிறது. பெரும்பாலும் பொருளாதார வாதங்களிலேயே நாம் அமிழ்ந்துவிடுகிறோம். இந்த குறைகளை சரி செய்ய, நமது அமைப்பின் அடித்தளங்களை நாம் வலுப்படுத்தியாக வேண்டும்.

வலுவான அடித்தளமின்றி, மகத்தான கட்டிடத்தை கட்ட முயாது. வேரிலிருந்து நமது அமைப்பை நாம் வலுப்படுத்த வேண்டும். அதற்கு மாநில அமைப்புகள் சங்க உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க அதிக கவனம் செலுத்த வேண்டும். அமைப்பை உயிரோட்டமாய் வைத்திருக்க மாநில அமைப்புகள் சங்க அமைப்பு விதிகளின்படி மாநாடுகளையும், பிரதிநிதித்துவப் பேரவைகளையும் நடத்திட வேண்டும். சம்மேளனம் அறிவிக்கும் தேசிய வேலை நிறுத்தத்தில் நமது மாநில அமைப்புகளில் சில துறைகள் முழு வலிமையுடன் பங்கேற்கவில்லை என்பதை பார்க்கிறோம். தேசிய வேலை நிறுத்தம் தொடர்பாக ஊழியர்களிடம் பரப்புரைகூட அவை செய்வதில்லை. எனவே நாட்டின் தவிர்க்க முடியாத தொழிற்சங்கமாக நாம் இருக்க விரும்பினால், தேசிய வேலை நிறுத்தங்களிலும், கடை அடைப்புகளின் போதும் நமது ஆழமான பங்கேற்பை நாம் காட்டியாக வேண்டும் என்ற உங்கள் அனைவரையும் நான் வேண்டிக் கொள்கிறேன். அன்பார்ந்த தோழர்களே!

நமது இலக்குகளை அடைய தொடர்ந்த மற்றும் விடாப்பிடியான முயற்சி தேவை. இந்திய அரசும், பெரும்பாலான மாநில அரசுகளும் நிதி மூலதன அமைப்புகள் கட்டளையிடும் புதிய தாராளமய கொள்கைகளை பின்பற்றுகின்றன. விளைவாக ஊழியர்களின் ஓய்வூதியம் உட்பட கடும் உழைப்பினால் எட்டப்பட்ட உரிமைகள் முதலாளித்துவ சக்திகளால் கொள்ளையடிக்கப்படுகின்றன. முறையான ஊதியங்களை ஊழியர்களுக்கு பதிலாக அரசுப் பணிகளில் ஒப்பந்த / தற்காலிக / தினக்கூலி ஊழியர்களை நியமிக்கும் முறை வளர்த்தெடுக்கப்படுகிறது. மக்கள் திரளிடையே புதிய தாராளமய கொள்கைகளை அமல்படுத்துவதற்கான கருவியாக வகுப்புவாதம் இருக்கிறது. அரசாங்கத்தில் தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக போராடுவதற்கான உறுதி உழைக்கும் வர்க்கத்திடம் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் மக்களின் ஆதரவு இருந்த அனுபவத்தை நாம் பெற்றுள்ளோம். எனவே, வரலாற்றுபூர்வ கடந்த காலம் கொண்ட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், பல்வேறு மாநிலங்களில் உள்ள ஊழியர்களின் நலன்களை பாதுகாக்க அடிப்படையான, உறுதியான போராட்டத்திற்கு ஊழியர்களை அணிதிரட்ட வேண்டும். பரந்துபட்ட வகையில் அத்தகைய போராட்டத்திற்காக நாம் ஊழியர்களை தயார்படுத்த வேண்டும். ●

## “பஞ்ச்”

மொரப்பா

இரத்த தானம்
செய்வோம் -
கொசுவுக்கல்ல!

உயிர்த்தியாகம்
செய்வோம் –
கரோனாவுக்கல்ல!



கட்டுரை

# வங்கிகள் இணைப்பும் – வரப்போகும் பாதிப்புகளும்

-இரா.மங்களபாண்டியன்

அரசு வங்கிகளில் 6 வங்கிகளை 4 பெரிய வங்கிகளுடன் இணைத்துள்ளது மத்திய அரசு. இதன் மூலம் அரசு வங்கிகளின் எண்ணிக்கை 12 ஆகக் குறைந்திருக்கிறது. இணைப்பு நடவடிக்கையால் அரசு வங்கிகள் வலுப்பெறும், அவற்றின் நிர்வாகச் செலவுகள் குறையும், புதிய கிளைகள் தொடங்கப்படும், பெரிய அளவிலான வங்கிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

வங்கிகள் இணைப்பால் பணிக்கலாச்சார மாற்றம், இடமாற்றம் என்று ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பல பிரச்சனைகள் உண்டு. அரசு வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டால், சாதாரண வாடிக்கையாளர்களுக்கு நிச்சயமாகப் பாதிப்பு ஏற்படும். உதாரணமாக 2017-ல் ஸ்டேட் வங்கியின் 5 துணை வங்கிகளும், பாரத் மகிளா வங்கியும் ஸ்டேட் வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்ட பிறகு 2000-க்கும் மேற்பட்ட கிளைகளும், 250-க்கும் மேற்பட்ட நிர்வாக அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. 6 லட்சம் கிராமங்கள் உள்ள நமது நாட்டில், பொதுத் துறை வங்கிகளின் கிராமப்புறக் கிளைகள் சுமார் 35,000 மட்டுமே. இவற்றை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக வங்கிகள் இணைப்பு மூலமாக குறைப்பதற்கான முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. உண்மையில் வங்கித்துறையைத் தனியார் மயமாக்குவதுதான் அரசின் நோக்கம். 1991-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அனைவருக்கும் அதுவே கொள்கை. அவ்வாறு தனியார்மயமாக்கல் காலதாமதமாகும் பட்சத்தில், அரசு வங்கிகளை கார்ப்பரேட்டுகளுக்குச் சாதகமாக மாற்றி அமைக்க வேண்டும் என்பது ஐஎம்எப், உலக வங்கிகளின் கட்டளை. அதை நிறைவேற்றும் வகையிலேயே தற்போது வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்றிரண்டு பெரிய வங்கிகளின் மூலமாகவே கார்ப்பரேட்டுகளுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கடன் வழங்குவது இனிமேல் எளிதாக இருக்கும். வாராக் கடனைத் தள்ளுபடி செய்யவும் இதுவே வசதியாக இருக்கும். வங்கிகள் பெரிதாகப் பெரிதாக சாதாரண மக்களுக்கான சேவையும், கடனும் அரிதாகும் என்பதே உலக அனுபவம்.

வாராக் கடன்கள் வங்கிக் கிளைகளில் உண்டு. ஆனால், அது மிகவும் சொற்பம். ஏழைகள், நடுத்தர மக்கள் சட்டத்துக்கு பயந்தவர்கள், அவர்கள் வாங்கிய கடனை சரியாகத் திருப்பிச் செலுத்திவிடுகிறார்கள். மொத்த வாராக் கடனில் ரூ.5 கோடியும், அதற்கு மேலும் வழங்கப்படும் கடன்களே மொத்தக் கடனில் 56மூ இவர்கள் திருப்பிச் செலுத்தாததால் ஏற்பட்ட வாராக் கடன்தான் 88மூ என்று ரிசர்வ் வங்கியின் ‘குi;யொஉயைட ளுவயடிடைவைல சுநிழசவ’ கூறுகிறது. இத்தகைய கடன்கள் மண்டல அலுவலகங்கள், தலைமை அலுவலகங்களால் வழங்கப்படுபவை.

புதிய பகுதிகளுக்கு வங்கி சேவையை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் இதுவரை மத்திய அரசிடம் இல்லை. 4 கிளைகளுக்கு ஒரு கிளையைக் கிராமப்புறத்தில் திறக்கப்பட வேண்டும் என்ற ரிசர்வ் வங்கியின் விதியை தனியார் வங்கிகள் மதிப்பதே இல்லை. 2015 ஜனவரி மாதம் 2, 3 தேதிகளில் புனேவில் ‘கியான் சங்கம்’’ என்ற பெயரில் பொதுத்துறை வங்கிகளின் தலைவர்களும் நாட்டின் பிரதமரும், நிதியமைச்சரும் கலந்து கொண்ட ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தனியார் துறை வங்கிகளைப் போல் அரசு வங்கிகளும் கிராமப்புறங்களில் கிளைகளில் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும், சாமானிய மக்களுக்கான முன்னுரிமைக் கடனைக் குறைக்க வேண்டும் என்று கொள்கை வகுக்கப்பட்டது. இதை வகுத்துக்கொடுத்தது ‘மெக்கன்ஸி’’ என்ற வெளிநாட்டு தனியார் கம்பெனி, அந்த அடிப்படையிலேயே வங்கி நிர்வாகங்கள் செயல்படுகின்றன.

தற்போதுள்ள நிலைமையிலேயே சுமார் 50 சதவீத கிராம மக்களுக்கு வங்கிக் கடன் கிடைக்காத காரணத்தால் அவர்கள் கந்து வட்டிக்காரர்களையும், நிலச்சுவான்தாரர்களையும் சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கும் சிறு வியாபாரிக்கும் கடன் வழங்குவதில் அரசு வங்கிகள்தான் உச்சத்தில் உள்ளன. தனியார் வங்கிகள் அவற்றின் அருகில் கூட வர முடியாது. ஆனால், அனைத்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கடன் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை என்றே சொல்லலாம். அரசு வங்கிகளில் இத்தகைய கடனை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக பெரும் தொகையிலான கடன்களை வழங்குவதற்கான அழுத்தம் மேலிருந்து கொடுக்கப்படுகிறது. இதற்கான முழுப்பொறுப்பும் மத்திய அரசையும் ரிசர்வ் வங்கியையும் வங்கி உயர்மட்ட நிர்வாகத்தையுமே சாரும்.

2016-ம் ஆண்டு பணமதிப்பு நீக்க நடவடிக்கையின்போது, 50 நாட்கள் பெண் ஊழியர்கள் உட்பட வங்கி ஊழியர்கள் நள்ளிரவு வரை பணியாற்றினார்கள். நாட்டின் பிரதமரே இச்சேவையை பாராட்டினார். மத்திய அரசு, ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அரசு வங்கிகள் இயங்குகின்றன. வாடிக்கையாளர் சேவை அளிப்பதில் ஒவ்வொரு பொதுத் துறை வங்கியும் தனித்தன்மையுடன்தான் செயல்பட்டுவருகிறது. இருப்பு மற்றும் கடனுக்கான வட்டி விகிதமும் வங்கிக்கு வங்கி மாறுபடவே செய்கிறது.

வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டதற்குப் பிறகுதான் மொத்தக் கடனில் சாமானிய மக்களைக் கை தூக்கிவிடும் வகையில் 40% முன்னுரிமைக் கடன் என்ற விதியே நடைமுறைக்கு வந்தது, அதில் 18% விவசாயத்துக்குக் கட்டாயம் உள்ஒதுக்கிடு செய்யப்பட வேண்டும். விவசாயக் கடன், சிறு தொழில் செய்யக் கடன், கல்விக் கடன், வீடு கட்ட கடன் என்று பல கடன் திட்டங்கள் உள்ளன. ரூ.2 லட்சம் வரையில் விவசாயக் கடன், ரூ.4 லட்சம் வரையில் கல்விக் கடன் எந்தப் பிணையும் இல்லாமல், சொத்து அடமானம் இல்லாமல் வழங்குவது அரசு வங்கிகள் மட்டும்தான். ஆனால், இதை நீர்த்துப் போகச் செய்ய கடந்த 28 ஆண்டுகளாக மத்திய அரசு முயன்று வருகிறது. 'மக்கள் பணம் மக்களுக்கே" என்ற முழக்கத்தை முன்வைத்து, வங்கி ஊழியர்களின் தொடர்ச்சியான பிரச்சாரங்களும் இயக்கங்களும் , போராட்டங்களும்தான் இன்று வரை இத்திட்டத்தைக் காப்பாற்றி வருகின்றன.

1991-ல் காங்கிரஸ் அரசு, ஐஎம்எப் அறிக்கையை அப்படியே 'நரசிம்மம் கமிட்டி அறிக்கை" என்று பெயர் சூட்டி நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. வங்கிகளில் உள்ள அரசின் பங்குகளை தனியாருக்கு விற்றது. 10 புதிய தனியார் வங்கிகளை அனுமதித்தது. அதில் 'குளோபல் டிரஸ்ட் வங்கி" என்ற தனியார் வங்கி 10 வருடம் கூடத் தாக்குப்பிடிக்க முடியாமல் கவிழ்ந்தது. அதை 'ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ்" என்ற அரசு வங்கியுடன் இணைத்ததால் அரசு வங்கிக்கு ரூ.1100 கோடி நஷ்டம் ஏற்பட்டது. 2014-ல் பாஜக அரசு, பிஜே நாயக் குழுவை அமைத்து ' எல்லா அரசு வங்கிகளையும் தனியார்மயமாக்க வேண்டும்" என்று பரிந்துரைக்கச் செய்தது. அந்த அறிக்கையை உடனே நடைமுறைப்படுத்தவும் தொடங்கிவிட்டது. 2015-க்குப் பிறகு 2 அகில இந்திய அளவிலான தனியார் வங்கிகளையும், 11 பேமெண்ட் வங்கிளையும், 10 சிறு வங்கிகளையும் இக்காலகட்டத்தில் அனுமதித்துள்ளது. இவை சாதாரண மக்களைக் கசக்கிப்பிழிகின்றன. வருடம் 25% கந்து வட்டியில் கடன் வழங்குகின்றன.

வங்கித்துறை தனியார் கைகளுக்குச் சென்றால், அரசின் கட்டுப்பாடிலிருந்து விடுபட்டுவிடும். அரசின் மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது. சாமானிய மக்களுக்குக் குறைந்த வட்டியில் பிணை இல்லாமல் கடன் கிடைக்காது. மக்கள் மீதான சுமை இன்னும் கூடும். வேலைவாய்ப்பு இருக்காது. வாடிக்கையாளர்களின் சேமிப்புக்குக்கூடப் பாதுகாப்பு இருக்காது. இந்தியப் பொருளாதாரத்தின் அச்சாணி பெருநிறுவனங்களின் கைகளில் சிக்கிவிடும.

எனவே வங்கிகளின் இணைப்பை எதிர்ப்போம் வர்க்க ஒற்றுமையை காப்போம்.

●

**நையாண்டி உரையாடல்**

# “கோட்டைசாமி கோயிலுக்கு போயி தீ மிதிங்க; அப்பத்தான் இந்த நோய் சரியாவும்!”

- ‘அ’னா‘ஊ’னா



***அரசு ஊழியரின் மனைவி:*** டாக்டர் இவரை கொஞ்சம் அவசரமா பாருங்க கொஞ்ச நாளாகவே ``ஏமாத்திட்டாங்க ஏமாதிட்டங்க``ன்னு ராத்திரியெல்லாம் தூங்காம புலம்பிகிட்டே இருக்காரு. யாரு ஏமாத்திட்டாங்கன்னு கேட்டா...

***டாக்டர்:*** திரும்பவும் ``ஏமாத்திட்டாங்க ஏமாத்திட்டாங்க``ன்னு சொல்றாரா?

***அரசு ஊழியர்:*** கரெக்ட்டா சொன்னீங்க சார் ``திரும்பவும் ஏமாத்திட்டாங்க``

***அ.ஊ.மனைவி:*** இப்படித்தான் டாக்டர் ஏடாகூடமா பேசறாரு.

***டாக்டர்:*** சார் எங்கேயாச்சும் கவர்ன்மென்ட் ஆபீஸ்ல வேலை செய்யாறாரா?

***அ.ஊ.மனைவி:*** ஆமாம் டாக்டர்

***டாக்டர்:*** அதான் ரொம்ப டென்சனா இருக்காரு. இப்ப பாருங்க இவரு டென்சனை நான் எப்படி சரி படுத்தறேன்னு.

***டாக்டர்:*** (அரசு ஊழியரைப் பார்த்து) இன்னாங்க சார் வூட்டுல ரொம்பத்தான் பெனாத்துறீங்களாமே. உங்களுக்கு இருக்கறது பழைய டென்சனா? இல்ல புது டென்சனா?

***அரசு ஊழியர்:*** புது டென்சன்தான். பழைய டென்சன் தர்றதா சொல்லித்தான் ஏமாத்திட்டாங்களே.

***அ.ஊ.மனைவி:*** டாக்டர் சார் என்ன பேசறீங்க ஒன்னும் புரியமாட்டேங்குது

***டாக்டர்:*** நாங்க பென்ஷனை பத்தி பேசறோம். கிராஸ் பண்ணாம கொஞ்சம் கேளுங்க (என்றவர் தொடர்கிறார்)

***டாக்டர்:*** சாரே அதுதான் கமிட்டி ரிப்போர்ட்டை பரிசீலிச்சு சாத்தியகூறுகளை ஆராயறோம்னு கவர்ன்மென்ட்ல சொல்லி இருக்காங்களே. ஏன் அவசரப் படறீங்க?

***அரசு ஊழியர்:*** நான் அவசரப் படறேனா? மண்ணாங்கட்டி! ஏமாத்தறாங்க சார்

ஏமாத்தறாங்க. போன கவர்ன்மென்ட்லயே, கோர்ட்டுல ஸ்ரீதர் கமிட்டி கொடுத்த ரிப்போர்ட்டை, ரெண்டு வருஷம் கழிச்சி வாங்கி ஆராஞ்சி, ரிப்போர்ட் பிரகாரம் பழைய பென்ஷன் திட்டத்துக்கு வாய்ப்பே இல்லன்னு சொல்லிட்டு பழைய பென்சனுக்கு போன அரசு மூடு விழா பண்ணினதை இப்போ திரும்பவும் கையில் எடுத்துக்கிட்டு பரிசீலிச்சு சாத்தியகூறுகளை ஆராயரோம்னு சொல்றது அரசு ஊழியர்களை ஏமாத்துற வேலை சார்.

*(டாக்டர் அரசு ஊழியரின் மனைவியை பார்த்து) சாருக்கு மெமரி பவர் பயங்கரமா இருக்குங்க. டோன்ட் ஒரீ.*

***டாக்டர்:*** *சார் அதுபோகட்டும் டே டு டே விலைவாசி உயார்ந்துகிட்டே இருக்கே அதைபத்தி என்ன நினைக்கிறீங்க?*

***அரசு ஊழியர்:*** *எங்க உயருது? சென்ட்ரல்லதான் உயருது. இங்கே உயரலயே. சொன்னபடி செய்யலையே கவர்ன்மென்ட்.*

***அ.ஊ.மனைவி:*** என்ன டாக்டர் இது? இப்பத்தான் ஞாபக சக்தி சூப்பரா இருக்குன்னு சொன்னீங்க. ஆனா இவரு விலைவாசி ஏறவே இல்லேன்கிறாரு.

***டாக்டர்:*** *(அரசு ஊழியர் மனைவியைப் பார்த்து) உஸ்... கொஞ்சம் சும்மா இருங்க நாங்க இப்போ டி.ஏ.வைப் பத்தி பேசிக்கிட்டு இருக்கோம்.*

***டாக்டர்:*** *சார், அதான் நிதி நிலைமை சரியானதும் உங்களுக்கு எல்லாத்தையும் பண்ணித் தர்றதா முதல்வர் சொல்லி இருக்காரே?*

***அரசு ஊழியர்:*** தினமும் காய்கறி அரிசி பருப்பு பெட்ரோல் டீசல்னு எல்லாம்தான் ஏறிக்கிட்டே இருக்கே நிதி நிலைமை எங்கே சார் சரியாகும், எல்லாம் ஏமாத்துறாங்க சார். சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஊழியருக்கும் ஸ்டேட் கவர்ன்மென்ட் ஊழியருக்கும் கடைக்காரன் வேற வேற ரேட்லயா அரிசி பருப்பு விக்கிறான்?

***டாக்டர்:*** *(அரசு ஊழியரின் மனைவியைப் பார்த்து) எத்தனை மாசமா இந்த ப்ரோப்ளம் இருக்கு?*

***அ.ஊ.மனைவி:*** கடந்த எட்டு மாசமா டாக்டர். போன மார்ச் வரைக்கும் ஓரளவுக்கு நார்மலாத்தான் இருந்தாரு. அதுக்கு பிறகு இப்படி ஆயிட்டாரு. யாரோ ஈட்டியை எடுத்து முதுகில குத்திட்டாங்க, ஏமாத்திட்டாங்கன்னு வேற ஒரே புலம்பல் டாக்டர்.

***டாக்டர்:*** *சார் உங்க முதுகை காட்டுங்க (என்றவாறு முதுகை தடவியவாறு) முதுகுல எதுவும் காயம் தெரியலேயே. யார் ஈட்டியை எடுத்து குத்தினது?*

***அரசு ஊழியர்:*** *சார் என்ன நீங்க.* குத்தனவங்களே தேவலாம் போல இருக்கே. ஈட்டிய விடுப்பை ஏப்ரல் 1ஆம் தேதியில இருந்து கொடுப்பாங்கன்னு எதிர்பார்ப்போடு இருந்தா மறு உத்தரவு வரை நிறுத்தி வைக்கிறோம்னு ஆர்டர் போடறாங்க. சொன்ன சொல்லை காப்பாத்தனும் சார். அரசு ஊழியர்களின் நெஞ்சுல குத்தினாக்கூட ஏத்துப்போம். ஈட்டியால முதுகிலே குத்தினா எப்படி சார்? ஒரு தடவை ஏமாத்தினா பரவாயில்ல ஒவ்வொரு முறையும் ஏமாத்தினா எப்படி சார். அரசு ஊழியன் முகத்துல இளிச்சவாயன்னா எழுதி வச்சிருக்கு? ஏமாத்திட்டாங்க சார் நல்லா ஏமாத்திட்டங்க சார்.

*(டாக்டர் அரசு ஊழியரின் மனைவியை பார்த்து) ஏம்மா இதுக்கெல்லாம் டாக்டர் ட்ரீட்மென்ட் எதுவும் சரிப்படாது. கோட்டைசாமி கோவிலுக்கு போய் தீ மிதிக்கச் சொல்லுங்க இவரை. அப்பத்தான் இது சரியாகும்.*

***அ.ஊ.மனைவி:*** கோட்டைசாமி கோயிலா? அது எங்கே இருக்கு டாக்டர்.

***டாக்டர்:*** அது உங்க வீட்டுக்காரருக்கே தெரியும். இவரை மாதிரி தினமும் நாலு பேர் இங்க வர்றாங்க. அவங்களுக்கு எல்லாம் நான் இதைதான் சொல்லித் தான் அனுப்பறேன். அவங்களை எல்லாம் ஒண்ணா சேர்த்துகிட்டு சீக்கிரம் போகச் சொல்லுங்க. இல்லாட்டி இந்த நோய் முத்திடும். வேற ட்ரீட்மென்ட் கிடையாது. ஜாக்கிரதை. ●

கட்டுரை

# 2022 மே 28 கோரிக்கைகள் தினம்

# நவ தாராளமயத்தை எதிர்ப்போம் தேசத்தின் நலனைக் காப்போம்

- தெ.வாசுகி

முதலாளித்துவம் தவிர்க்க முடியாத நெருக்கடியை சந்திக்கும்போதோ அல்லது சந்திக்க நேரும் என்ற மரண பயம் அவர்களை கீழ்ப்படுத்தும் போதோதான் பாசிசத்தையும் சர்வாதிகாரத்தையும் நோக்கி நகர்கின்றனர்.

-தோழர் அண்டோனியோ கிராம்சி

பீகார் மாநிலம் பெகுசராய் நகரில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 17 ஆம் தேசிய மாநாடு 2022 ஏப்ரல் 13 முதல் 16 முடிய நான்கு நாட்கள் நடைபெற்றது, மாநாட்டின் இறுதியில் அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் மக்கள் நலன் சார்ந்த முக்கியமான 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 17வது மாநாட்டின் தொடர்ச்சியாக மே 28, 2022 அன்று கோரிக்கைகள் தினம் நடத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முதல் அறைகூவல் தீர்மானம்**

நமது நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் பெருகிவிட்டது. ஒன்றிய, மாநில அரசுகள் நிரந்தர பணி நியமனம் செய்வதற்கு மாறாக, ஒப்பந்த நியமனங்களை மிகவும் பரவலாகி வருகின்றன கேரளா மற்றும் தென்னிந்தியாவில் சில மாநிலங்களைத் தவிர, எல்லா இடங்களிலும் பணி நியமனத் தடை நீடிக்கிறது. ஒன்றிய பா.ஜ,க அரசின் முக்கிய நோக்கம் அரசுத் துறைகளைக் குறைப்பதும், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதுமாக உள்ளது. ஒன்றிய, மாநில அரசுகளின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் போராட்டங்களை நடத்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இப்பிரச்னையை எதிர்கொள்ள பெரும்பான்மையான கூட்டமைப்புகளுடன் கூட்டு மேடைகளை உருவாக்கிடவும், கூட்டுப் போராட்டங்களை நடத்திடவும் முடிவாற்றப்பட்டு அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன 17 ஆம் தேசிய மாநாட்டில் முதல் அறை கூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

ஒன்றிய அரசு தாராளமயக் கொள்கைகளை வேகமாக செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக நாட்டில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும், நாட்டின் பாதுகாப்பு பகுதிகள் உட்பட அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டுள்ளன. ஏர் இந்தியா நிறுவனம் ரூ.60,000 கோடி மதிப்பிலான சொத்துக்களை ரூ.18,000 கோடிக்கு டாடா மோட்டார்ஸுக்கு மாற்றியுள்ளது. லாபம் ஈட்டும் பிபிசிஎல் உள்ளிட்ட பெட்ரோலிய நிறுவனங்களும் விற்பனையில் உள்ளன. இன்சூரன்ஸ் துறையில் அன்னிய முதலீட்டு வரம்பை 49 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாக உயர்த்துவதுடன், சுமார் 30 கோடி பாலிசிதாரர்கள் மற்றும் 34 லட்சம் கோடி முதலீடுகளைக் கொண்ட எல்ஐசியின் பங்குகளை விற்கவும் முடிவு செய்துள்ளது. வங்கித் துறையின், அனைத்து லாபங்களையும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மாற்றுவதையும், அனைத்து

இழப்புகளையும் தேசியமயமாக்குவதையும் கொள்கையாகவே கொண்டுள்ளது. 28 பொதுத்துறை வங்கிகள் 12 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன. SBI கடந்த பத்து ஆண்டுகளில் 2,500 கிளைகளை மூடியுள்ளது. 11.68 லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் எண்பத்தைந்து சதவீதம் கோடீஸ்வரர்கள் வாங்கிய கடன்களாகும். ரயில்வேயை முழுவதுமாக தனியார்மயமாக்கும் சஞ்சீவ் சன்யால் அறிக்கையை நடைமுறைப் படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. 41 ஆயுத தளவாடங்கள் ஏழு நிறுவனங்களாகக் குறைக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பும் 70 சதவீதம் அன்னிய முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதை அறிவித்து, தேசிய பணமாக்கல் பைப்லைன் (NMP) அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ .6 லட்சம் கோடியை திரட்ட இலக்கு வைத்துள்ளது. 26,000 கிமீ தேசிய நெடுஞ்சாலைகள், ரயில்வே, சுரங்கங்கள், துறைமுகங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், இயற்கை எரிவாயு குழாய்கள் மற்றும் விமான நிலையங்கள் அனைத்தும் தனியாருக்கு ஒப்படைக்கப்படுகின்றன.

**ஆளும் வர்க்கத்தின் நியாயமற்ற தொழிலாளர் கொள்கைகள்**

எதிர்காலத்தில், அனைத்து பொதுச் சேவைகளும் தனியார் மயமாகும்போது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தர பணியாளர்களின் பணி பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக மாறிவிடும். ஆளும் வர்க்கம் நியாயமற்ற தொழிலாளர் கொள்கைகளை பிற்போக்கான முறையில் செயல்படுத்துகிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற நீதிமன்ற ஆணையை முற்றிலும் மதிக்காத அரசாக ஒன்றிய அரசு இருந்து வருகிறது. ஒரு சில மாநில அரசாங்கங்கள் ஒப்பந்த மற்றும் சாதாரண தொழிலாளர் முறையை துறை ரீதியான மற்றும் தனியார் மயமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. முதலாளித்துவ பெருநிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு ஆதரவாக ஒன்றிய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளால் இந்தியாவில் உள்ள வேலைவாய்ப்புத் துறைக்கு கணிக்க முடியாத மற்றும் ஈடுசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்துவதோடு, முதலீட்டாளர்கள் மற்றும் சமூகத்தின் பெரு வணிகர்களின் நேர்மையற்ற உழைப்பு சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

நவ தாராளமயக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகவே ஒன்றிய அரசுப் பணியை பாஜக அரசு பலவீனப்படுத்தி வருகிறது. ஒன்றிய பணியில் 8.91 லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன. அரசின் உயர் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறது. விவசாயம், விவசாய நலன், வர்த்தகம், கைத்தொழில் மற்றும் நிதி ஆகிய அமைச்சுக்களில் மூன்று வருடங்களுக்கான ஒப்பந்தங்களும், மூத்த குடிமைப் பணி அலுவலர்கள் பதவிக்கு ஒப்பந்தப் பணி நியமனமும் நடைபெற்று வருகிறது. இது போன்ற நியமனங்கள் புதிய தாராளமயக் கொள்கைகளின் தீவிர வலதுசாரி ஆதரவாளர்களை இந்திய ஆட்சிப்பணியில் உள்ள முக்கிய பதவிகளுக்குக் கொண்டு வருவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள குறுக்கு வழியாகும்.

**ஒன்றிய பா.ஜ.க அரசை ஆதரிக்கும் மாநிலங்களின் நிலை**

உத்தரப் பிரதேசத்தில் அரசுப் பணித்துறை கடுமையான சவால்களைச் சந்தித்து வருகிறது. அரசு ஊழியர்களின் பணிபாதுகாப்புப் போராட்டங்களை ஒடுக்க அத்தியாவசிய சேவைகள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. போராட்டங்கள் மற்றும் தர்ணாக்களை அரசு தடை செய்துள்ளது. ஜம்மு-காஷ்மீரில் நிரந்தர நியமனம் நிறுத்தப்பட்டு, ஒப்பந்தப்

பணிகளுக்கு தனியார் ஏஜென்சிகள் நியமிக்கப்பட்டுள்ளது. 48 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களை செயல்திறன் அடிப்படையில் பணிநீக்கம் செய்வதற்கான பட்டியல் தயாராக உள்ளது. விதி 310, 311 (2) ஏ.பி.சி.யின்படி, 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மணிப்பூரில் அரசு ஊழியர்கள் நான்கு தவணை நிலுவைத் தொகைக்காக ஆகஸ்ட் 17, 2021 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு அரசின் உறுதிமொழியுடன் போராட்டம் முடிவுக்கு வந்தது. கர்நாடகாவில் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று லட்சம். இவர்கள் அகவிலைப்படி, வருடாந்திர சம்பள உயர்வு அல்லது பிற சலுகைகள் பெறுவதில்லை. மேற்கு வங்கத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக நிரந்தரப்பணி நியமனங்கள் செய்யப்படவில்லை. நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை ஒன்றரை லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. திரிபுராவில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு நிரந்தர நியமனம் என்பது முற்றிலும் நிறுத்தப்பட்டது மட்டுமல்லாமல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டமும் அமல்படுத்தப்பட்டது.

### புதிய ஓய்வுதிய திட்டத்தினை முற்றிலும் இரத்து செய்ய வேண்டும்

கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிக்க வசதியாக NPS இல் அரசாங்கம் தனது பங்குகளை 14 சதவீதமாக உயர்த்தியுள்ளது. தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வைப்புத்தொகை மற்றும் சொத்துக்களை நிர்வகிக்கும் NPS அறக்கட்டளையை (PFRDA )விலிருந்து பிரிக்க மத்திய அரசு முயன்று வருகிறது. நாட்டின் கூட்டாட்சி தத்துவத்தை வலுவிழக்கச் செய்வதற்கும், பணியாளர்கள் நியமனத்தில் மத்திய அரசு ஒருதலைப்பட்சமாக தலையிடுவதற்கு வசதியாகவும், அகில இந்திய சேவை பிரதிநிதித்துவ விதிகளை திருத்தம் செய்துள்ளது.

### ஒருதலைப்பட்சமான தேசிய கல்விக் கொள்கை

கல்வி என்பது ஒரே பட்டியலில் இருந்தாலும், மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு வகுத்துள்ளது. உண்மையில், புதிய கல்விக் கொள்கை முழுமையான தனியார்மயமாக்கல் மற்றும் வகுப்புவாதத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### வளர்ச்சி என்ற பெயரில் வீழ்ச்சி

வளர்ச்சி என்ற பெயரில் பின்பற்றப்படும் தாராளமயமாக்கல், தனியார்மயம், உலகமயமாக்கல் போன்ற கொள்கைகள் நம் நாட்டில் உள்ள கிராமப்புற மக்களையே அதிகம் பாதித்துள்ளது. தற்போதைய பொருளாதாரக் கொள்கை ஆட்சியானது ஒட்டுமொத்த தேசியப் பொருளாதாரத்தையும் துயரத்திலும் சரிவிலும் சரி, உழைக்கும் மக்களை அதிகம் பாதித்துள்ளது. நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் விரிவடைந்துள்ளன, ஏனெனில் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் செல்வங்கள் பெரிய மற்றும் பெரிய பங்குகள் சில பெரிய பெருநிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடம் சேர்க்கப்படுகின்றன. நாட்டின் விவசாயத் துறை வீழ்ச்சியில் உள்ளது. புதிய தாராளமயக் கொள்கைகளின் வருகைக்குப் பிறகு வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மோசமாகி வருகிறது. இந்திய மக்களின் வாங்கும் திறன் வெகுவாகக் குறைந்து, உள்நாட்டுத் தேவை சுருங்குவதற்கு வழிவகுக்கிறது. நமது பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் இப்போது அதிக அந்நிய நேரடி முதலீட்டிற்காக திறக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு, காப்பீடு, இரயில்வே மற்றும் பிற துறைகளில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் முடிவு மற்றும் எண்ணெய் மற்றும் நிதித் துறை உட்பட பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடுகளை திரும்பப்

பெறுவதற்கான அதன் தீவிர நடவடிக்கை தேசிய பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும்.

புதிய தாராளமயக் கொள்கைகள் நாட்டின் சிவில் சேவையை ஆழ்ந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. சிவில் சர்வீஸ் என்பது சாதாரண மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைத் தீர்ப்பதற்கான தனித்துவமான பொறிமுறையாகும், மேலும் இது அரசாங்கத்தின் சார்பாக பெரும் பங்கு மற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப அரசுப் பணியின் வலிமையும் செயல்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டும்.

**கார்ப்பரேட்களின் தயவில் தொழிலாளர்களை தள்ளும் அவலம்**

ஒன்றிய அரசு "அமர்த்து துரத்து" என்ற பெயரில் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் அனைத்து உரிமைகள் மற்றும் சலுகைகளை பறிப்பதற்கும் தடையற்ற உரிமைகளுடன் முதலாளிகளுக்கு அதிகாரம் அளித்துள்ளது. நிரந்தர வேலைவாய்ப்பை நேர அடிப்படையிலான வேலையாக மாற்றுவது மற்றும் அனைத்து நிறுவனங்களுக்கும் நிலையான கால வேலைவாய்ப்பை விரிவுபடுத்துவது என்பது தொழிலாளர்களை அடிமைப்படுத்துவதற்கும், கார்ப்பரேட்களின் தயவில் தொழிலாளர்களை தள்ளுவதாகும். தொழிலாளர்களுக்கான ஊதிய திருத்தத்தில் மாநிலங்களிடையே ஒற்றுமை இல்லை. பெரும்பாலான மாநிலங்கள் 10 ஆண்டு ஊதிய திருத்த முறையை அமல்படுத்தி வருகின்றன. அரசு ஊழியர்களின் ஊதியத்தை ஐந்தாண்டுகளுக்குள் திருத்த வேண்டும். மத்திய-மாநில உறவுகளை மறுவடிவமைக்க வேண்டும் மற்றும் மத்திய அரசு தங்கள் சொந்த ஊழியர்களின் ஊதிய திருத்தத்திற்கு போதுமான நிதியை மாநில அரசுகளுக்கு ஒதுக்க வேண்டும். வருமான வரி நிர்ணயம் செய்வதற்கான உச்சவரம்பு வரம்பை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிக்காமல், அரசு ஊழியர்களையும், தொழிலாளர்களையும் நெருக்குதல் தொடர்கிறது. தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களின் வாழ்வு, வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் மீதான ஆளும் வர்க்கங்களின் அதிகரித்து வரும் தாக்குதல்களால் தொழிலாள வர்க்கம் இன்று சவாலான சூழ்நிலையை எதிர்கொள்கிறது.

**இறையாண்மையை காக்க மதவாத விஷத்தை முறியடிப்போம்**

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்று அரசியலமைப்பின் முகப்புரை வலியுறுத்துகிறது. ஆனால் நாட்டின் மதச்சார்பற்ற விழுமியங்கள் பெரும் ஆபத்தில் உள்ளன, மேலும் அரசாங்கம் அதன் அடக்குமுறை எண்ணங்களை மற்றவர்கள் மீது திணிப்பதன் மூலம் நாட்டின் மதச்சார்பற்ற தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயற்சிக்கிறது. சங்பரிவார் சக்திகள் கல்வி முறை, ஆராய்ச்சி மற்றும் கலாச்சார நிறுவனங்களுக்கான நிகழ்ச்சி நிரலை ஆணையிடுகின்றன. மத சிறுபான்மையினருக்கு எதிரான பெருகிவரும் தாக்குதல்கள், மத்திய அரசின் ஆதரவுடன், ஆபத்தான முறையில் அதிகரித்து வருகின்றன. தலித்துகள் மற்றும் சமூகத்தின் பிற சமூக ஒடுக்கப்பட்ட பிரிவினர் மீதான தாக்குதல்கள் மற்றும் வன்கொடுமைகள் நாடு முழுவதும் கடுமையாக அதிகரித்து வருகின்றன. பல்கலைக்கழகங்களில் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் முயற்சிகள் மற்றும் குடிமக்களின் அரசியலமைப்பு உரிமைகள் மீதான வெளிப்படையான தாக்குதல் ஆகியவற்றை போராடி முறியடிக்க வேண்டும். 2019க்குப் பிந்தைய தேர்தல்கள், இனவாத தேசியவாத ஜிங்கோயிஸ்டிக்

கதையை உருவாக்கியதன் மூலம் அதிக இடங்கள் மற்றும் அதிக சதவீத வாக்குகளுடன் பாஜக மீண்டும் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது. அப்போதிருந்து, வெறித்தனமான வகுப்புவாத துருவமுனைப்பைக் கூர்மைப்படுத்தி, நமது மதச்சார்பற்ற ஜனநாயக அரசியலமைப்பின் அடித்தளத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில், ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தை கலைத்து, அரசியலமைப்பின் 370 மற்றும் 35A பிரிவுகளை ரத்து செய்வதில் இறங்கியது; அரசியலமைப்பிற்கு எதிரான குடியுரிமை திருத்தச் சட்டத்தை (CAA) சட்டமியற்றியது, அயோத்தியில் கோயில் கட்டத் தொடங்கியது மற்றும் கொடூரமான தடுப்பு நடவடிக்கையின் மொத்த தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளை இரக்கமின்றி தாக்கியது.

**நவ தாராளமயத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கம் அணிதிரளவேண்டும்**


தடுப்பு சட்டங்கள் அனைத்தும் இந்திய அரசியலமைப்பு குடியரசின் தன்மையை மாற்ற தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வகுப்புவாதம் தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமையை வளர்ப்பதைத் தடுக்கிறது மற்றும் பல நூற்றாண்டுகளாக ஒருங்கிணைந்த போராட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்ட தொழிலாளர், மக்கள் ஒற்றுமையை அழித்துவிடும். புதிய தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கம் மற்றும் மக்களின் ஐக்கியப் போராட்டங்களை வளர்ப்பதற்கும், நிலைநிறுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் இது தீவிரமாகத் தடையாக இருக்கிறது. எனவே, தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்த முயலும் அனைத்து சக்திகள் மற்றும் போக்குகளுக்கு எதிராக போராடுவது தொழிலாளி வர்க்கத்தின் முக்கிய கடமையாக உள்ளது - மதம், ஜாதி. பிராந்தியம், மொழி, பாலினம் போன்றவை. வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டம் ஒன்றுபட்ட போராட்டங்களை வலுப்படுத்துவதற்கான நமது முயற்சிகளின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்க வேண்டும். புதிய தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டம் மற்றும் வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டம் போன்றவற்றின் மூலம் தொழிலாள வர்க்கத்தின் பரந்த ஒற்றுமை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தின் கோரிக்கைகள் மீதான ஐக்கியப் போராட்டங்களின் மூலம் அடையப்படும் ஒற்றுமை வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான சக்திவாய்ந்த ஆயுதமாக இருக்கும்.

**அரசு ஊழிர்களை அணி திரட்டுவோம் சமூக நல்லிணக்கத்தை காப்போம்**

மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, மதச்சார்பின்மை நிலைநிறுத்தவும், ஊழியர்களின் ஒற்றுமைக்காகவும், வகுப்புவாத மற்றும் பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் அரசு ஊழியர்களை அணிதிரட்டவும், நாட்டில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கத்தையும், குறிப்பாக மாநில அரசு ஊழியர்களையும் ஒன்றுதிரட்டி, மக்கள் மற்றும் தேசத்தின் நலனைக் காக்க, நவ தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களில் பெருமளவில் இணைய வேண்டும் என்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் 17ஆம் தேசிய மாநாட்டில் அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றியது. இந்தப் போராட்டங்களில் நாம் அனைவரும் இணைந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பிரச்னைகள் மட்டடுமல்லது அனைத்து பிரிவினரின் உரிமைக்காவும், சமூக நல்லிணக்கம், மதச்சார்பின்மை ஆகியவற்றுக்காவும், வளம் கோர்போம் கரம் கோர்போம் தாய்நாட்டின் நலன் காப்போம்! ●

# "டீ செலவு மிச்சம்"

- ஜிஜி



**முன் குறிப்பு :**

**இது எள்ளளவும், எள் முனையளவும் அரசியல் உள்நோக்கம் இல்லாத கதை.**

ராகவனை ரோட்டுக்கடை மசால்வடை வாசனை இழுக்க... அவனுடைய ஸ்கூட்டி அவனை கேட்காமலேயே கடை ஓரத்தில் நின்றது. அந்த நான்கு சக்கர டயர் வண்டியில் சுண்டலும், மசால்வடையும் வாங்க சுமார் 20 பேர் போட்டி போட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்குள் நுழைந்து முட்டி மோதி சுண்டல்வடை வாங்கி வருவதற்கு அவன் பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது. சுண்டலுக்கு மேலே நசுக்கிப் போட்டிருந்த மசால் வடையின் ஒரு துண்டை சூடாக ஸ்பூனில் எடுத்து எச்சில் ஊற வாய்க்குள்போட போனபோது அவன் செல்போன் மணி ஒலித்தது. அலுவலகத்தில் இருந்து அவன் மனைவி பேசினாள்.

``ஏங்க, நான் ஆபீஸ்ல இருந்து கிளம்பிட்டேன். ஷேவ் பண்ணீடீங்களா?``

``எங்கே ஷேவ் பண்றது தனம்? மிக்சி ஜார் ரிப்பேர் பண்ணச்சொன்னே இல்ல, முன்னேல்லாம் 100 ரூபா கொடுப்பேன். இப்போ 300 ரூபா கேக்கறான். எங்கே ஷேவ் பண்றது? ``

``பரவாயில்லீங்க பணம் போனா போகட்டும். நீங்க ஷேவ் பண்ணிட்டு சீக்கிரம் வீட்டுக்கு வாங்க. என்னோட ஆபீஸ் பிரெண்ட்ஸ் எல்லாம் டீ பார்ட்டிக்கு வந்துகிட்டு இருக்காங்க.``

``தனம், பெட்ரோல் டீசல் விலை இவ்வளவு ஏறி இருக்கும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. தெரியாத் தனமா ரெண்டு லிட்டர் பெட்ரோல் வேற போட்டுட்டேன்.``

``ஏங்க நான் உங்களை முதல்ல ஷேவ் தானே பண்ணச் சொன்னேன். நீங்க ஏன் மிக்சி ஜாரை ரிப்பேர் பண்ணீங்க? அதை நாளைக்கு கூட செஞ்சி இருக்கலாம். பெட்ரோல் ஏன் ரெண்டு லிட்டர் போட்டீங்க. சரி இப்போ கையிலே எவ்வளவு வச்சி இருக்கீங்க?``

``இன்னா ஒரு அம்பது ரூபா சில்லறை இருக்கும். கொஞ்சம் பணம் 4ஜீபே பண்ணேன். உடனே ஷேவ் பண்ணிட்டு வந்துடறேன்.``

``ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம். நீங்க ஷேவ் பண்ணி வீட்டுக்கு வந்து குளிச்சி ரெடி ஆவறதுக்குள்ள டீ பார்ட்டியே முடிஞ்சிடும். எனக்கு ப்ரோமோஷன் வருது. அதுக்கு ஆபீஸ் பிரண்ட்ஸ்க்கு டீ பார்ட்டி கொடுக்கிறேன்னு தெரிஞ்சும் நீங்க இப்படி பண்றது கொஞ்சம் கூட பிடிக்கலே ராகு. எங்கேயாச்சும்

பார்க்குலே உட்கார்ந்துட்டு 9 மணிக்கு மேல வாங்க. நீங்க வெளியூருக்கு போய் இருக்கறதா சொல்லி சமாளிச்சிக்கிறேன். பார்ட்டி நடக்கற நேரத்துல வீட்டுக்கு வந்து அசிங்கப்பட வேணாம்.``

``ஏய் தனம், எனக்கு என்ன சூடு சொரணை இல்லியா? நீ என்ன என்னை வர வேணாம்னு சொல்றது? நானே உன் டீ பார்ட்டியை புறக்கணிக்கிறேன். ஆனா வீட்டுக்கு வந்தப்புறம் மிச்ச மீதி டீயை குடிக்க சொன்னே...அவ்வளவுதான் பாத்துக்கோ.`` என்றான் ராகவன்.

``உங்களுக்கு டீ வேணாம்னா போங்க, டீ செலவு மிச்சம்.`` என்றவள் போனை துண்டித்தாள்.

இரவு 10 மணி. காலிங் பெல் ஒலிக்க தனலட்சுமி கதவை திறந்தாள். மப்போடு கையில் பையுடன் நின்றிருந்த ராகவன், ``டீ பார்ட்டி எல்லாம் முடிஞ்சிடுச்சா தனலட்சுமி, மொத்த டீ செலவு எவ்வளவு?`` என்று கேட்டான்.

``என்ன ராகவன்? ஷேவிங் பண்ணிட்டு வாங்கன்னா கட்டிங் போட்டுட்டு வந்திருக்கீங்க? கையில என்ன பை அது?`` என்று கேட்டாள்

``அதுவா மிக்சிஜார். இதை ரிப்பேர் பண்ண முடியாது வேஸ்ட்னு கடைக்காரன் சொல்லிட்டான்.``

``ஆரம்பிச்சிட்டீங்களா. சரி ஸ்கூட்டியை உள்ளே பார்க் பண்ணிட்டீங்களா?``

``அதுவா ரயில்வே ஸ்டேஷன் பக்கத்துல இருக்க உன் ஆபீஸ் பிரெண்ட் பிருந்தா வீட்டுல விட்டுட்டேன்.``

``உங்க நிலைமையை பார்த்து வண்டியை அவ வீட்டுல விட்டுட்டு போகச் சொன்னாளாக்கும்?``

``விடுப்பா...பெட்ரோல் செலவு மிச்சம்!`` என்றவன் கர்லான் பெட் மீது `பொத்`தென விழுந்து தூங்கிப் போனான்.

``அய்யோ. இந்த மனுஷனை வச்சுக்கிட்டு நான் இன்னும் எவ்வளவு அவமானப் படறது?`` என்றவாறு தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள் தனலட்சுமி! ●

## பள்ளிக் கல்வி தொகுப்பூதிய ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவது எப்போது?

பள்ளிக்கல்வி தொகுப்பூதிய ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அனைத்து தொகுப்பூதிய ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் சென்னையில் உள்ள பள்ளிக்கல்வித் துறை வளாகத்தில் பெருந்திரள் கவன ஈர்ப்பு முறையீடு போராட்டம் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் ஜே.வாலன்றின் பிரிட்டோ தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு போராட்டத்தை துவக்கி வைத்தார். மாநில பொதுச்செயலாளர் க. லெட்சுமணன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் செ.பிரபாகர், அரசு ஊழியர் சங்கத்தின் தென்சென்னை மாவட்டத் தலைவர் நா.வினோத்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வம் போராட்டத்தை நிறைவு செய்து பேசினார். இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ●

# ஒன்பது ஆயிரம் ரூபாய் ஓய்வூதிய வாக்குறுதி என்னாச்சு?

# சத்துணவு ஊழியர்கள் பெருந்திரள் முறையீடு!

**- மலர்**

சென்னை,ஏப்19- தமிழக முதல்வர் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் பெருந்திரள் முறையீடு போராட்டம் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நடைபெற்றது.

மாநிலத் தலைவர் ஆர்.கலா தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வம் போராட்டத்தை துவக்கி வைத்து பேசினார். சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அ.மலர்விழி கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். வணிகவரி பணியாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சா.டேனியல் ஜெயசிங், இந்து அறநிலையத்துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தெ.வாசுகி, நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ. அம்சராஜ், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பாரி, ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் கு.வெங்கடேசன், அரசு ஊழியர் சங்கத்தின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் என்.வினோத், வடசென்னை மாவட்டச் செயலாளர் ம.அந்தோணிசாமி, சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் சுந்தரம்மாள் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். போராட்டத்தை நிறைவு செய்து அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு பேசினார். இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பொதுச்செயலாளர் மலர்விழி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். 38 ஆண்டுகளாக பணி முடித்து ஓய்வு பெற்றவர்களுக்கு 2 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த இரண்டாயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு அந்திம காலத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா?, எனவே 9 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும், இனி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். 38 ஆண்டுகள் பணி செய்து ஓய்வு பெறும் போது சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஒட்டுமொத்த தொகையாக 1 லட்ச ரூபாயும், சமையல் உதவியாளருக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும். எனவே




அமைப்பாளருக்கு 5 லட்ச ரூபாயும், சமையல் உதவியாளருக்கு 3 லட்ச ரூபாயும் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு அமைப்பாளரும் 3 அல்லது 4 மையங்களை பார்க்க வேண்டியுள்ளது. எனவே இதில் உள்ள 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். சிலிண்டர் மூலம் சமைக்க கூறுகிறார்கள். ஆனால் இன்று சிலிண்டர் விலை 1,100 ரூபாய். ஆனால் அரசு வழங்குவதோ மிகவும் சொற்ப தொகைதான். எனவே சிலிண்டரை அரசே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் 21ஆம் தேதி நடைபெறவுள்ள எங்கள் துறை சார்ந்த மானியக் கோரிக்கை வர உள்ளதால் முதல்வர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பதற்காக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த முறையீடு போராட்டத்தை நடத்துகிறோம்.

ஊழியர்கள் முறையாக விடுப்பு எடுத்து விட்டு முதல்வரிடம் முறையிட வந்து கொண்டிருந்த ஊழியர்களை காவல்துறையினர் ஆங்காங்கே மடக்கி

எங்களின் போராட்டத்தை ஒடுக்கும் வகையில் கைது செய்து மண்டபங்களில் வைத்திருக்கிறார்கள். எனவே உடனடியாக அவர்களை விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே மாநிலத் தலைவர் கலா தலைமையில் மலர்விழி, பே.பேயத்தேவன், ஆ. பெரியசாமி, ப.சுந்தரம்மாள் ஆகியோர் முதல்வரின் தனி அலுவலர் ராம் பிரதாப், சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவனையும் தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது கோரிக்கைளை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக அலுவலரும், அமைச்சரும் தெரிவித்துள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். ●

---

**கவிதை**

# சரண்டர்

- மனோஹரி

மார்ச் வரை
பிரிந்திருப்போம்
என்றாய்

மார்ச் சுக்குப் பிறகோ
மறு உத்தரவு உரை
பிரிந்திருப்போம்
என்கிறாய்

மறு உத்தரவு வரை
என்பது எதிர்காலமா
இறந்தகாலமா
என்று நீ
சொல்லி விட்டால்
பிரிந்திருப்பது
எனக்கொண்ணும்
பிரச்னையல்ல !

## காஞ்சிபுரத்தில் சர்வதேச மகளிர் தின விழா

காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கருத்தரங்கம் 09-04-2022 அன்று காஞ்சிபுரம், வருவாய் துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் சிறப்பாகவும், எழுச்சியாகவும், நடைபெற்றது. காஞ்சிபுர மாவட்ட மகளிர் துணை அமைப்பாளர் தோழர் எம்.ஆர்.திலகவதி தலைமையேற்று நடத்தினார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் கே.பூங்கொடி வரவேற்புரை ஆற்றினார். TNGPTA மாநிலத் தலைவர் தோழர் எஸ.ரஞ்சிதட்சிங். தோழர் வெ.லெனின் மாவட்ட தலைவர் மற்றும் வட்ட மாவட்ட துறை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள் “ அரசு ஊழியர் சங்கமும் பெண்ணுரிமை முழக்கமும்” என்ற தலைப்பில் தோழர் தெ.வாசுகி மாநில துணை பொதுச்செயலாளர் அவர்களும், “சங்கமும் கடந்து வந்த பாதையும்” என்ற தலைப்பில் என்.சாரங்கன் மாவட்டத்தலைவர் TNGPA அவர்களும் கருத்துரையாற்றினார்கள். மாவட்டச் செயலாளர் தோழர் துரை மருதன் நன்றி கூறினார் . கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது. கருத்தரங்கில் 70க்கும் மேற்பட்ட முன்னணி தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

## தருமபுரியில் அரசு ஊழியர் சங்க பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் சங்க பயிற்சி வகுப்பு தருமபுரி சிஐடியு அலுவலகத்தில்ஏப்ரல் 9 ஆம் தேதி நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம். சுருளிநாதன் தலைமைவகித்தார். மாவட்டசெயலாளர் ஏ.சேகர் வரவேற்று பேசினார். சங்க ஸ்தாபனம் குறித்து மாநில துணைத்தலைவர் ஜி.பழனியம்மாள் அவர்களும், போராட்ட வெளிச்சத்தில் எதிர்கால திசைவழி என்ற தலைப்பில் மாநில துணை பொதுச்செயலாளர் என்.வெங்கட்டேசன் அவர்களும் .சமூக வரலாறும் சங்க வரலாறும் என்ற தலைப்பில் மாநில துணை பொதுச்செயலாளர் எம்.சீனிவாசன் அவர்களும் பேசினர். மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி,மாவட்ட துணைசெயலாளர் குணசேகரன் ,தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சி.காவேரி ஆகியோரும் பங்கேற்று பேசினர். பயிற்சி வகுப்பில் ஏராளமான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

## பணி ஒய்வு நாள் தொடர்பான தமிழக அரசின் தெளிவுரை

Human Resources Management (FR-II) Department, Secretariat, Chennai - 600 009.

Letter No.593235/FR-11/2022, dated 27.04.2022
From: Tmt. Mythili K. Rajendran, IAS, Secy. to Govt.
To: All Secretaries to Government, Chennai-9. All Departments of Secretariat, Chennai- 9. All Heads of Departments /District Collectors /

District Judges / District Magistrates The Secretary, Tamil Nadu Public Service Commission,

Chennai-600 003. The Registrar General, High Court of Madras, Chennai-600 104. The Registrar, High Court of Madras (Madurai Bench), Madurai. The Accountant General, Chennai - 18. The Resident Audit Office, Chennai - 9. The Commissioner of Treasuries and Accounts, Chennai -35.

Sir/Madam, Sub Fundamental Rules - Rule 56(1)(a) - Retirement on superannuation - Enhanced from 59 years to 60 years - Amendment - Issued - Clarification - Regarding. Ref: 1. G.O. (Ms.) No.29, Personnel and Administrative Reforms (S) department, dated 25.02.2021. 2. G.O. (Ms.) No.92, Personnel and Administrative

Reforms (FR-II) department, dated 13.09.2021.

I am directed to invite your attention to the reference second cited, wherein amendments were issued to Clause (a) of sub-rule (1) of rule 56 of the Fundamental Rules, enhancing the age of superannuation from 59 years to 60 years, based on the executive orders issued in the Government order first cited.

2. In this connection, clarifications are being sought for from various Government departments / individuals as to whether the date of retirement of Government servants is the afternoon of the last day of the month in which the Government servant attains the age of sixty years or the day on which he / she attains the age of sixty years.

3. It is clarified that every Government servant in the superior service as well as in the basic service shall retire from service under Fundamental Rule 56(1)(a), on the afternoon of the last day of the month in which he attains the age of sixty years.

Yours faithfully,
for Secretary to Government

கவிதை

## வலுக்கும் குரல்கள்!

- ஆர்.நடராஜன்

குடியுரிமை பெற்று
குளத்தில் நீந்தும் மீன்கள்....
பதிவு செய்து வானத்தில்
பறக்கும் பறவைகள்.....
கணக்கெடுப்பில் கலந்துகொண்டு
காட்டில் நுழையும் கால்நடைகள்....

எச்சரிக்கை.....!

கட்டுக்குள் வராதவைகள்
காட்டு விரோதிகளாக அறிவிக்கப்படும்.

புல் உண்பதா? புலால் உண்பதா?
காட்டாமை தீர்ப்பே முடிவானது!
ஓடைகளை கடக்க சுங்கவரியும்.
இரை தேட தொழில் வரியும்.
இளைப்பாற சேவை வரியும்.
செலுத்துவது கட்டாயம்.

சிற்றெரும்புகள் வாழும்
சிறு வளைகள் இடையூறு என்று
இயந்திரத்தால் இடித்துத் தள்ளப்படும்.

காட்டு நலன் காக்க கூட்டம் சேர்ந்தால்
பாதுகாப்பு சட்டம் பாய்ந்து
கூண்டுக்குள் அடைக்கப்படலாம்.

கருப்பானது, கொம்பு உள்ளது,
நெட்டையானது, வாய் நீளமானது,
எதிர்த்து நிற்பது என வகை பிரித்து
ஒற்றுமையை சீர்குலைக்க
ஓர் ஆயிரம் சூழ்ச்சிகள்.

நிகழ்ச்சி நிரல்படி தான்
நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆனாலும் .....
ஆரம்பத்திலிருந்தே கேட்கும் தொலைவில்
எச்சரிக்கை குரலொன்று
வலுத்துக்கொண்டேய இருக்கிறது.

'ஒன்றுசேருங்கள்......!
இழப்பதற்கு இனி எதுவுமில்லை,
பெறுவதற்கோ
பசுஞ்சோலை காத்திருக்கிறது.'

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

திமுக தேர்தல் வாக்குறுதியை நடப்பு சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே நிறைவேற்றிட வலியுறுத்தி 2022, ஏப்ரல்-20 அன்று தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற மாவட்டங்கள்

**கிருட்டினகிரி மாவட்டம்**

புதிய பென்சன் திட்டம் ரத்து செய்து அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டம் அமலாக்கிட வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புர நூலகர்கள், MRB செவிலியர்கள், கணினி இயக்குநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும், கொரோனாவை காரணம் காட்டி இரண்டு ஆண்டுகளாக முடக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்புவிப்பு மேலும் காலம் குறிப்பிடாமல் தடை செய்ததை உடனே திரும்பப்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கிருட்டினகிரி மாவட்டம்,

கிருட்டினகிரி கிளையில் 6 இடங்களில் 46 பெண்கள் உட்பட 186 பேரும், சூளகிரி கிளையில் 3 இடங்களில் 46 பெண்கள் உட்பட 95 பேரும், ஓசூர் கிளையில் 3 இடங்களில் 89 பெண்கள் உட்பட 189 பேரும், தேன்கனிக்கோட்டை கிளையில் 1 இடத்தில் 8 பெண்கள் உட்பட 32 பேரும்,

போச்சம்பள்ளி கிளையில் 2 இடங்களில் 13 பெண்கள் உட்பட 44 பேரும், ஊத்தங்கரை கிளையில் 2 இடங்களில் 30 பெண்கள் உட்பட 68 பேரும், பர்கூர் வட்டக்கிளையில் 2 இடங்களில் 11 பெண்கள் உட்பட 51 பேரும் என மொத்தம் 19 இடங்களில் 243 பெண் ஊழியர்கள் உட்பட 422 பேர் கலந்துகொண்டனர். ஆர்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள், B. சந்திரன், R.நடராஜன், V. தேவராஜ், K.ஜெயலட்சுமி, K.ஜெகதாம்பிகா, K. ராமச்சந்திரன், M.சப்தமோகன், R.M.மஞ்சுளா, C. கோவிந்தராஜ், C.கல்யாணசுந்தரம், V.முரளி, வட்டக் கிளை நிர்வாகிகள் தோழர்கள் A. மணி, G வெங்கடேசன், M.நந்தகுமார், K.C.A.தினேஷ், K.கனகவள்ளி, M. சிவா,M.திம்மராஜ், C. திருநாவுக்கரசு, S.முருகேசன் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்போடு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

**கடலூர் மாவட்டம்**

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்தில் வட்ட தலைவர் வி.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்ட செயலாளர் என்.ராமர் கோரிக்கை விளக்கவுரையாற்றினார், மாவட்ட தலைவர் டி.இரவிச்சந்திரன் துவக்கவுரையாற்றியதும், மாவட்ட பொருளாளர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட துணை தலைவர் எம்.குமார், இராம.வெங்கடாஜலபதி, கு.கவியரசு சமூக நலத்துறை ஊழியர் சங்க மாநில துணை தலைவர் பா.ஆசைதம்பி, அங்கன்வாடி பணியாளர் சங்க தலைவர் அனுசுயா ஆகியோர் வாழ்த்தி பேதினார்கள் இறுதியாக ஓய்வூதியர் சங்க மாவட்ட துணை தலைவர் எஸ்.கருணாகரன் நிறைவுரையாற்றியதும் வட்ட பொருளாளர் ஏ.வேலு நன்றி கூறினார். பண்ருட்டி வட்டத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக வட்ட செலாளர் K. செந்தில்குமார் தலைமையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்றது மாவட்ட தலைவர் டி.இரவிச்சந்தின் சிறப்புரையாற்றினார்.விருத்தாசலம் வட்டத்தில் வட்ட தலைவர் என்.பன்னீர்செல்வம் தலைமையில் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கே.சின்னசாமி துவக்கவுரையாற்றினார், ஓய்வூதியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் என்.கோவிந்தராஜன், சத்துணவு அங்கன்வாடி பணியாளர்கள் ஓய்வூதியர் சங்க வி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் இறுதியாக மாவட்ட செயலாளர் எல். அரிகிருஷ்ணன் நிறைவுரையாற்றியதும் வட்ட இணை செயலாளர் ரகு நன்றி கூறினார். வேப்பூர் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக வட்ட தலைவர் தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்ட செயலாளர் பி.சதாசிவம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். புவனகிரி

வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணை செயலாளர் ஆர்.ரெத்தினகுமரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிதம்பரம் வட்டத்தில் வட்டாட்சியார் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை தலைவர் எம். வீரமணி, மாவட்ட இணை செயலாளர் எஸ். பாலகிருஷ்ணன் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள். காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் குமராட்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.தமிழ்செல்வன் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் .மாவட்ட செயலாளர் சி. மச்சேந்திரன் வாழ்த்துரை வழங்கினார்.

**நாகப்பட்டினம் மாவட்டம்,**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வேதாரண்யம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் அற்புதராஜ் ரூஸ்வெல்ட் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநிலத் தணிக்கையாளருமான ஜெ.ஜம்ருத்நிஷா நிறைவுரையாற்றினார். வட்டப் பொருளாளர் சி. கலியபெருமாள் நன்றியுரையாற்றினார். நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் கே. இரவிச்சந்திரன் தலைமைதாங்கினார்.மாவட்டப் பொருளாளர்ப.அந்துவன்சேரல் விளக்கவுரையாற்றினார். சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் மாநிலச் செயற்குழு உறுப்பினர் கார்த்திகா உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார. நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். வேதாரண்யம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் வி.எஸ். இராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் உதயகுமார் நிறைவுரையாற்றினார். கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஆர்ப்பாட்டத்திற்கு k. சண்முகநாதன் தலைமை. தாங்கினார். வட்டத் துணைத் தலைவர் s.முருகையன் முன்னிலை வகித்தார்.. T. சகிலா,ஒன்றியத் தலைவர் .சத்துணவு ஊழியர் சங்கம் கீழ்வேளூர்N. ஜமுனாராணி. ஒன்றிய செயலாளர் .சத்துணவு ஊழியர் சங்கம் கீழ்வேளூர்K.. பாளாம்பாள் மாவட்ட பொருளாளர் சத்துணவு ஊழியர் சங்கம் நாகை மாவட்டம்R.G. சுதா ஒன்றியத் துணைத் தலைவர் சத்துணவு ஊழியர் சங்கம் கீழ்வேளூர் N. புகழேந்தி. ஓய்வு பெற்ற ஊழியர் சங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் அருளேந்திரன் சிறப்புரை ஆற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் B. ராணி நிறைவுரை ஆற்றினார். வட்ட பொருளாளர் N. பாலமுரளி நன்றியுரை ஆற்றினார்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தி;;;ல் 6 வட்டக்கிளைகளில் 8 இடங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் முனைவர் கா. பால் பாண்டி கோரிக்கை விளக்கவுரையாற்றினார், மாவட்டப் பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ், மாவட்டத் துணைத்தலைவர் தோழர் ஜீவானந்தம், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் தோழர் ராம்ராஜ், மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் மார்க்கெரட் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள், மாநில துணைத்தலைவர் தோழர் பெரியசாமி நிறைவுரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் கலையரசி நன்றி உரையாற்றினார். அரசு மருத்துவமனையில் வட்டக்கிளை நிர்வாகி தோழர் மார்கெரட் தலைமையில் நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி -2 வட்டக்கிளையில் பல்துறை கட்டிடம் மன்னார்புரத்தில் துணைத்தலைவர் ஸ்ரீவர்சன் தலைமையிலும், அரசு ஐடிஐயில் மாவட்ட

இணைச் செயலாளர் தோழர் பாபு தலைமையிலும், வட்டக்கிளை செயலாளர் தோழர் இராம்ராஜ் முன்னிலையில், மணப்பாறை வட்டக்கிளையில் அரசு தலைமை மருத்துவமனை முன்பாகவும் வட்டக்கிளை செயலாளர் தோழர் வெங்கடேசன் தலைமையிலும், துறைய+ர் வட்டக்கிளை செயலாளர் தோழர் மணிமாறன் தலைமையிலும், இலால்குடி வட்டக்கிளையில் தலைவர் தோழர் ஜெயராஜ் தலைமையிலும், தொட்டியம் வட்டக்கிளை துணைத் தலைவர் ஜெயகொடி தலைமையில் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் சத்தியவாணி; தலைவர்: முனைவர். கா. பால் பாண்டி செயலாளர்: பொ. பழனிச்சாமி பொருளாளர்: இரா. சுந்தர்ராஜ்துணைத் தலைவர்கள் இணைச் செயலாளர்கள் மாநில செயற்குழு உறுப்பினர் மா. சகாதேவன் க. முருகானந்தம் க. இராமராஜ் மு. ஜீவானந்தம் சி.அ. பாபு கா. சிவசங்கர் ந.அமுதவள்ளி பெ. வெங்கடேசன் ஐ. அல்போன்ஸா முன்னிலையி;ல நடைபெற்றன. மாவட்டங்களில் 8 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர் எ.பெரியசாமி, மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட தலைவர் முனைவர் பால் பாண்டி, மாவட்டச்செயலாளர் தோழர் பழனிச்சாமி, மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ், மாவட்ட துணைத்தலைவர்கள் தோழர் சகாதேவன், தோழர் ஜீவானந்தம், மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர் அமுதவள்ளி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் சத்தியவாணி, வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரி சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் கலந்துகொண்டார்கள்.

### திருவாரூர் மாவட்டம்

திருவாரூர் மாவட்ட மையம் சார்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மாவட்டம் முழுவதும் 21 இடங்களில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட தலைவர் தோழர் வெ.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் செ.பிரகாஷ் கோரிக்கை விளக்கவுரையாற்ற தோழர்கள் விஜய் ஆனந்த், எஸ். தமிழ்செல்வம், வி.சிவக்குமார், வி.தட்சிணாமூர்த்தி, பி.மகாலிங்கம், ஜெ,ஜனகராஜ், எஸ். செந்தில்குமார், எஸ்.மாதவன்ராஜ், எஸ். சகிலா, எஸ். பாஸ்கரவள்ளி, அறிவுச்செல்வம், எஸ்.பழனியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் உ.சண்முகம் நிறைவுரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 74 ஆண்ஊழியர்களும் 17 பெண் ஊழியர்களும் என 91 முன்னணி தோழர்கள் கலந்துகொண்டனர். இறுதியில் மாவட்ட பொருளாளர் தோழர் செ.செங்குட்டுவன் நன்றிவுரை நிகழ்த்தினார். மாவட்டம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 413 ஆண் ஊழியர்கள் 116 பெண்ஊழியர்கள் மொத்தம் 529 முன்னணி தோழர்கள் கலந்துகொண்டனர்.

### காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் வட்டக்கிளையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட பொருளாளர் தோழர் வே.குமார் தலைமையில் மாவட்ட செயலாளர் தோழர் துரை.மருதன் விளக்க உரையாற்றினார் TNROA மாவட்ட தலைவர் தோழர் T.ரமேஷ் வாழ்த்துரை நிகழ்த்தினார். மாவட்ட தலைவர் வெ.லெனின் நிறையுரையாற்றினார். TNRDOA மாவட்ட துணை தலைவர் தோழர் நிர்மல்குரு நன்றி கூறினார் 100-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துக் கொண்டனர். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் வட்டார வளர்ச்சி, அலுவலகம், திருபெரும்புதூர் வட்டார வளர்ச்சி அலுவலகம், வாலாஜாபாத் வட்டார வளர்ச்சி அலுவலகம், குன்றத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய ஐந்து இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 155 பெண் ஊழியர்கள் உட்பட 298 ஊழியர்கள் பங்கேற்றனர். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com